# வேத பாரதி செய்திகள்

**VEDABHARATHI SEITHIGAL**

Tamil Monthly
தமிழ் மாத இதழ்


| | | | | |
|---|---|---|---|---|
| மலர்:5 | இதழ்: 6 | மார்ச் : 2021 | ரூ.10/– | வருட சந்தா:ரூ.100/– |
| **Volume:5** | **Issue: 6** | **March : 2021** | **Rs.10/-** | **Annual Subs: Rs.100/-** |




# SHRI MAHA MERU MANDALI TRUST

Reg. No.DIT (E) No.2 (651) 12-13/Sl.No.90/13-14

**Shri G.S. Venkataraman**
Author

**Shri N. Subramaniam**
Managing Trustee

**Shri S. Suga, Smt. B. Indira Balaji, Shri. R.V. Sahtyanarayana, Shri. J. Sathish, Sow. G.V. Mahashree Neela**
Trustees



# சித்திரை பௌர்ணமி

## கூட்டுப்பிரார்த்தனை

**நாள் :**
**26.04.2021 திங்கட்கிழமை**

**நேரம் :**
**மாலை 5.00 மணி**

**இடம் :**
**ஸ்ரீ தண்டீஸ்வரர் திருக்கோயில்**
**வேளச்சேரி**

**தொடர்புக்கு :**
**94440 60346 / 94434 95950**

**வேதபாரதி**

# வேதபாரதி
## செய்திகள்



**காயத்ரீ தேவி**

**வியனுலகனைத்தையும் அமுதென நுகரும்**
**வேத வாழ்வினைக் கைப்பிடித்தோம்.** மஹாகவி பாரதி

# அறிவோம் வேதம்

இந்தப் பகுதியில் ஒவ்வொரு மாதமும் ஒரு வேதமந்திரமும் அதற்குண்டான பொருளும் வழங்கப்படும்.

## வேதமந்திரம் - 18

**ஸத்1யமேவ ஜயதே1 நாந்ருத1ம் ஸத்1யேந ப1ந்தா2 வித1தோ1 தே3வயாந:/ யேநாக்1ரமந்த்1ய்ருஷயோ ஹ்யாப்1த்1கா1மா: யத்1ர த1த்1ஸத்1யஸ்ய ப1ரமம் நிதா4நம் //**

**-முண்டகோபநிஷதம் மூன்றாவது காண்டம் – 6**

**பொருள் :** வாய்மையே வெல்லும்; பொய்மை வெல்லாது, எந்த ப்ரஹ்ம லோகத்தில் ஸத்யத்தினால் அடையப்படும் அந்த மேலான லக்ஷியம் உண்டோ, அந்த லோகத்தை ஆசைகள் நீங்கிய ரிஷிகள் எந்தப் பாதையினால் அடைகிறார்களோ, அந்த ஒளி பொருந்திய பாதை ஸத்யத்தினால் அமைக்கப்பட்டுள்ளது.

அந்ருதம் – பொய்மை, பரமம் – மேலான, நிதானம் – லக்ஷியம்,

ஆப்தகாமா : ஹி – ஆசைகள் நீங்கிய, யேந – எதனால், பந்தா : - பாதை,

தேவயாந : - ஒளி பொருந்திய, ஆக்ரமந்தி - அடைகிறார்களோ,

விதத : - அமைக்கப்பட்டுள்ளது

**வேதபாரதி செய்திகள்**
(ஆன்மீக மாத இதழ்)

மலர்: 5 இதழ்: 6

அச்சிட்டு வெளியிடுபவர்
பதிப்பாளர், ஆசிரியர்
**ஆர்.வெங்கடராமன்**
27, F1 அன்னை இந்திரா நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.
செல்: 94434 95950

அச்சகம்
**சபாநாயகம் பிரிண்டர்ஸ்**
39, மில்லர்ஸ் சாலை, கீழ்ப்பாக்கம்,
சென்னை - 600 010.

**சந்தா விவரம்**
வருட சந்தா ரூ.100
ஆயுள் சந்தா ரூ.1500
சந்தா அனுப்புகிறவர்கள்
**Vedabharathi**
என்ற பெயருக்கு காசோலையை மேற்கண்ட அலுவலக முகவரிக்கு அனுப்பவும். சந்தா புதுப்பிப்பவர்கள் தங்களுடைய சந்தா எண்ணைத் தவறாமல் குறிப்பிடவும்.

வங்கி மூலம் புத்தக சந்தா
நன்கொடை வழங்கிட
**VEDABHARATHI**
**City Union Bank,**
**Velachery Branch**
**A/c No. 510909010005286**
**IFSC : CIUB 0000262**

**REGD No : TN/CC(S) / DN / 571 / 21-23**
**RNI No : 1282188**
**Title Code : TNTAM/2016/73726**
**R.Dic.No.1845/2015**
**VEDABHARATHI SEITHIGAL**
**(Tamil Monthly Magazine)**
**Published on : 1-7th (1st Week) Every Month**
**TN/PM G (CCR) / WPP 605/21-23 /**
**Valid from 01.01.2021 to 31.12.2023**


## ☞ புத்தகத்தின் உள்ளே


| | |
|---|---|
| ஒரு நிமிடம் உங்களோடு.. | 5 |
| பங்குனி மாத விசேஷங்கள் | 7 |
| அட்டைப்பட விளக்கம் | 8 |
| ஸ்ரீமத் பகவத்கீதை | 10 |
| நாலடியார் | 12 |
| தடுப்பு மருந்தின் கதை | 13 |
| சிருங்கேரி மஹா சுவாமிகள் | 17 |
| ஸ்ரீமத் பாகவதம் | 18 |
| தர்மத்தின் குரல் | 20 |
| பெற்றோர்களே கவனியுங்கள் | 27 |
| மஹா பெரியவாளின் அற்புத விளக்கங்கள் | 29 |
| பாரத தேசப் புனித யாத்ரை | 30 |
| சாதனைப் பறவைகள் | 33 |
| பசு சர்வரோக நிவாரணி | 36 |
| இராமாயணமும், மஹாபாரதமும் | 38 |
| புரோஹிதர் | 41 |
| இந்தியா 'பாபா' க்களின் மூழ்கிவிட்டதா - தொடர்ச்சி | 44 |



புத்தக வடிவமைப்பு :
**ரெம்ஸ் பிரிண்டீஸ்**
நெ.17, பாரதி தெரு, இந்திரா நகர்,
காமராஜபுரம், வேளச்சேரி,செ-42.
போன்: 8939000064

நிர்வாக முகவரி:
எண்.31, சேஷாத்திரிபுரம்
1வது மெயின் ரோடு, பேபி நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.
**Ph : 94434 95950**
**Email:vedabharathichennai@gmail.com**
**Website: www.vedabharathi.org**

# ஒரு நிமிடம் உங்களோடு.....

## "பரமாத்மா"

*"பகவான் ஸ்ரீகிருஷ்ணன்" என்பது ஒரு உருவமல்ல. அவர் நம் மனதின்* **"பரமாத்மா"**, *நம் மனதின்* **"சக்தி", "சுகம்"** *என்று நினைக்க வேண்டும். அப்படிப்பட்ட கிருஷ்ணனை நாம் அடைய வேண்டுமானால் நமக்கு ஒரு பாவனை செய்ய ஒரு ரூபம் வேண்டும். அந்த ரூபத்தின் மூலம்தான் நாம் பகவானை அடைய முடியும். அதனால்தான் கோயில்களில் பகவானின் விக்ரஹங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. எதையும் நாம் அனுபவப்பட வேண்டுமானால் அதற்கு ஒரு ரூபம் இருக்க வேண்டும். உதாரணத்திற்கு ஒருவர் நம்மிடம்* **"இனிப்பு"** *என்ற சுவையை கூறுகிறார். அந்த இனிப்பை நாம் உணரவேண்டுமானால் நமக்கு உருவமுள்ள ஒரு 'லட்டு' அல்லது 'ஜாங்கிரி' வேண்டும். அதை நாம் வாயில் போட்டால்தான் அந்த* **இனிப்பை** *நாம் உணரமுடியும். அதாவது இனிப்பின் அனுபவம் – அனுபூதி உண்டாகும். இனிப்பிற்கு ரூபம் கிடையாது. ஆனால் அந்த இனிப்பை அனுபவிக்க நாம் சாப்பிட்ட லட்டிற்கு ரூபம் உள்ளது. ஆனால் அந்த இனிப்பு எப்படி இருந்தது என்று நம்மால் விவரிக்க முடியாது. காரணம் அது ஒரு அனுபவம்.*

*நமக்கு பல்வலி ஏற்பட்டால் டாக்டரிடம் போய் நம் பல்லைத்தான் காட்டமுடியும். நம்முடைய வேதனையைக் காட்ட முடியாது. அது நம்முடைய அனுபவம் இதுபோல்தான் ரூபங்கள் எல்லாம், ரூபம் இல்லாத பகவானின் அனுபவத்தை நாம் அனுபவிக்க உண்டாக்கி வைத்துள்ள விக்ரஹங்கள். சிறு குழந்தைக்கு அதன் தாய் வாயில் சாதத்தை ஊட்டினால் சில குழந்தைகள் அந்த சாதத்தை விழுங்காமல் அப்படியே வாயில் வைத்துக்கொண்டே இருக்கும். "முழுங்குடா" என்று தாய் கூறினால்தான் விழுங்கும். இதுபோல் நம்மில் சிலர் பகவானின்*

*விக்ரஹத்தை மட்டும் பலமாக பிடித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் உண்மையான பக்தியைச் செலுத்தி அனுபூதியை அடைவதில்லை.*

*நம்முடைய மனதை நிலைநிறுத்துவது நம்முடைய சரீரமோ, நம்முடைய சொந்தங்களோ அல்லது பொருட்களோ அல்ல. இந்த மனதை நிலைநிறுத்துவது அதில் நிறைந்திருக்கின்ற சைதன்யம்தான். இதைத்தான் ஸ்ரீமத் பாகவதம்* **“ப்ரஹ்மேதி பரமாத்மேதி பகவாநிதி ஸப்த்யதே”** *(பாக 1-2-11) என்று கூறுகிறது. அதாவது “உபநிஷதுக்களால் ப்ரும்மம் என்றும் பரமாத்மா என்றும் பகவான் என்றும் நம் உள்ளே நிறைந்துள்ள சைதன்யத்தை அழைக்கிறார்கள்”. நாம் கோயிலுக்குப் போய் சும்மா பகவானை நமஸ்கரித்துவிட்டு கோயிலைச் சுற்றி சுற்றி வருவதில் ஒரு பிரயோஜனமும் கிடையாது. கோயிலுக்குப் போனால் கண்களை மூடிக்கொண்டு அந்த பகவானின் ரூபத்தை நம் மனதால் பார்த்து அந்த விக்ரஹத்தின் பாதத்தில் சிறிது நேரம் நம் மனதை சமர்ப்பித்தால் ஒரு உணர்வு நம் உள்ளே தோன்றும் அப்படி தோன்றினால் நமக்கு வேண்டிய நேரத்தில் வேண்டிய வழி கிடைக்கும். கீதையில் பகவான் கூறுகிறார்.*

**அவஜாநந்தி மாம் மூட$^{4}$ா ாமாநுஷீம் தநுமாஸ்ரிதம் /**
**பரம் ப$^{4}$ாவமஜாநந்தோ மம பூ$^{4}$தமஹேஸ்வரம் //**

**(கீதை 9 – 11)**

*என்னுடைய பர சொரூபத்தையும் நான் உயிர்களுக்கெல்லாம் ஈசனாயிருப்பதையும் அறியாத மூடர்கள் என்னை ஒரு மானுட வடிவம் எடுத்தவன் என்று எண்ணி என்னை அவமதிக்கிறார்கள்.*

தொகுப்பு : **டி. சூரியநாராயணன்**

Owned, Published and Printed by **R. VENKATARAMAN,** Printed at **SABANAYAGAM PRINTERS,** 39,Millers Road, Kilpauk, Chennai - 600010 and Published at 27, F1, Annai Indira Nagar, Velachery, Chennai - 600042.
Editor : **R. VENKATARAMAN, 9443495950**

## பங்குனி மாத விசேஷங்கள்

**(மார்ச் 16.03.2021 முதல் ஏப்ரல் 13.04.2021 வரை)**

| | | | |
|---|---|---|---|
| 14.03.2021 | பங் 1 | ஞாயிறு | காரடையார் நோன்பு |
| 17.03.2021 | பங் 4 | புதன் | சதுர்த்தி |
| 18.03.2021 | பங் 5 | வியாழன் | கிருத்திகை விரதம் ஸ்ரீ முத்துசாமி தீக்ஷிதர் ஜெயந்தி |
| 19.03.2021 | பங் 6 | வெள்ளி | சஷ்டி |
| 24.03.2021 | பங் 11 | புதன் | ஸ்மார்த்த ஏகாதசி |
| 26.03.2021 | பங் 13 | வெள்ளி | காஞ்சி ஸ்ரீஸ்ரீ ஜயேந்த்ர சரஸ்வதி ஸ்வாமிகள் ஆராதனை |
| 28.03.2021 | பங் 15 | ஞாயிறு | பௌர்ணமி, பங்குனி உத்திரம் |
| 31.03.2021 | பங் 18 | புதன் | சதுர்த்தி |
| 02.04.2021 | பங் 20 | வெள்ளி | அனுஷம் |
| 03.04.2021 | பங் 21 | சனி | சஷ்டி |
| 07.04.2021 | பங் 25 | புதன் | ஏகாதசி |
| 12.04.2021 | பங் 30 | திங்கள் | அமாவாசை |
| 13.04.2021 | பங் 31 | செவ்வாய் | தெலுங்கு வருடப்பிறப்பு |

## 11.04.2021 ஞாயிற்றுக்கிழமை - அமாவாஸை

ஸ்ரீ ஸார்வரி நாம ஸம்வத்ஸரே உத்தராயணே சிசிரருதௌ மீன மாஸே கிருஷ்ணபக்ஷே சதுர்தசயாம் உபரி அமாவாஸ்யாயாம் புண்யதிதௌ வாஸர: அத்ய பானு வாஸர யுக்தாயாம் உத்ரப்ரோஷ்டபதா நக்ஷத்திர யுக்தாயாம் விஷ்ணுயோக விஷ்ணுகரண ஸர்வ ஏவம் குண விஸேஷன விசிஷ்டாயாம் அஸ்யாம். அமாவாஸ்யாம் புண்யகாலே தர்ச ஸ்ராத்தம் தில தர்ப்பண ரூபேண அத்ய கரிஷ்யே.

*16.02.2021 செவ்வாய்கிழமை அன்று பிற்பகல் 2.00 மணி முதல் மாலை 5.00 மணிவரை சென்னை, தரமணி, உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தில் வேதபாரதி - ஔவையார் அறக்கட்டளை நடத்திய பாவை விழா நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.*

# அட்டைப்பட விளக்கம்
# மஹா சிவராத்திரி



இந்துக்களால் கொண்டாடப்படும் சிவனுக்குரிய விரதம்தான் **“மஹா சிவராத்திரி”.** இந்துக்களின் பண்டிகைகளில் “நவராத்திரியும், சிவராத்திரியும் மட்டுமே “ராத்ரி” என்றபெயரோடு அழைக்கப்படுகின்றன. சிவராத்திரி விரதம் ஐந்து வகைப்படும். அவை (1) நித்திய சிவராத்திரி (2) மாத சிவராத்திரி (3) பட்ச சிவராத்திரி (4) யோக சிவராத்திரி (5) மஹா சிவராத்திரி

ஆண்டுதோறும் ‘மாசி’ மாதத்தில் வரும் கிருஷ்ணபட்க்ஷ சதுர்தசி திதி திருவோணம் நக்ஷத்திரம் ஆகியவை ஒன்றுசேரும் நாள் ‘மஹா சிவராத்திரி” என்று அழைக்கப்படுகிறது. ஆதியும், அந்தமும் இல்லாத அருட்பெரும் ஜோதி ரூபத்திலிருந்து லிங்க வடிவமாக சிவபெருமான் வெளி வந்து அருளிய திருநாளே **‘‘மஹா சிவராத்திரி’’** இந்த விழாவை இன்பராத்திரி, பிரமசொரூபம், மகாதபசு, பிரகாசம், யசஸு, சகலபுவனம், சத்தியம் எனவும் கூறுவார்கள்.

உலகப் பிரளயத்தின்போது உயிர்கள் எல்லாம் சிவனிடத்தில் ஒடுங்கின. உலகங்களே தோன்றவில்லை. அந்த நிலையில் எல்லையில்லாக் கருணையுடைய அம்பிகை அண்டங்கள் தோன்றி இயங்கும்பொருட்டு இறைவனை இடைவிடாது தியானம் செய்தாள். சச்சிதானந்த சொரூபியான பரமசிவன் ஞான சக்தியாகிய உமையோடு ஒன்றி நின்று திரும்பவும் உலகை சிருஷ்டி செய்தார். அப்போது அம்பிகை சிவனிடம் “சுவாமி நான் தங்கள் மனதில் தியானித்துப் போற்றிய காலம் “சிவராத்திரி” என்று பெயர் பெறவேண்டும் என்றும்

*அதனை அனைவரும் "சிவராத்திரி விரதம்" என்று கடைபிடிக்க வேண்டும், அப்படி கடைபிடிப்பவர்கள் எல்லா நலன்களும் பெற்று முக்தி அடையவேண்டும்" என்று பிரார்த்தித்தாள். இறைவனும் "அவ்வாறே" என்று அருள் புரிந்தார். அதன்பின் அவ்விரதத்தை நந்தியம் பெருமாளும், தேவர்களும், சனகாதி முனிவர்களும் மேற்கொள்ளலாயினர்.*

*மஹா சிவராத்திரியன்று பகல்முழுவதும் உபவாசம் இருந்து (எதுவும் சாப்பிடக்கூடாது) அன்று மாலை முதல் இரவு நான்கு யாமங்களிலும் சிவனுக்கு ஸ்ரீருத்ர மந்திரத்தினால் பதினோரு திரவியங்கள் கொண்டு அபிஷேகம் செய்து நல்ல சுத்தமான பில்வத்தால் சஹஸ்ரநாம அர்ச்சனை செய்ய வேண்டும். பின் இரவு முழுவதும் விழித்திருந்து சிவனின் கதைகளைக் கேட்டு, பஜனை செய்து இரவைக் கழித்து மறுநாள் காலை குளித்து நித்ய பூஜை செய்து விரதத்தை பூர்த்தி செய்ய வேண்டும்.*

*இந்த விரதத்தை அனுஷ்டிப்பவர்களுக்கு எல்லா பாபங்களும் விலகும், ஆயிரம் அஸ்வமேத யாகம், நூறு வாஜபேய யாகம், ஆயிரம் ஆண்டுகள் காசியில் வாசம் செய்த புண்யம் கிடைக்கும் எனப்படுகிறது.*

*இந்தவருடம்* **"மஹா சிவராத்திரி"** *11.03.2021 வியாழக்கிழமை நிகழ்கிறது.*

*தொகுப்பு :* **டி.சூரியநாராயணன்.**

**SPOKEN HINDI CLASSES**
**No Reading / No Writing**
**Hindi Prachar Sabha Exam**
**Parichaya - Praveen**
**HINDI TUITIONS**
**XI - XII State Board / VI - X CBSE & ICSE**
**9500191417**

ஓம் நமோ பகவதே வாஸுதேவாய,
ஓம் நமோ நாராயணாய.

# ஸ்ரீமத் பகவத்கீதை

டி. சூரியநாராயணன் பகுதி - 23



## அத்தியாயம் – 2

## ஸாங்கிய யோகம்

**ந த்வேவாஹம் ஜாது நாஸம் ந த்வம்**
**நேமே ஜநாதி[4] பா: /**
**ந சைவ ந ப[4] விஷ்யாம: ஸர்வே**
**வயமத: பரம் // (கீதை 2-12)**

**பொருள் :** இவ்விதம் நான் எப்போதும் இருந்ததில்லை என்பது இல்லவே இல்லை, நீயும் இருந்ததில்லை இந்த அரசர்களும் இருந்ததில்லை என்பதும் இல்லை. இனி மேலும் நாம் அனைவரும் இருக்கப்போவதில்லை என்பதும் இல்லை.

பகவான் ஸ்ரீகிருஷ்ணர் அர்ஜுனனிடம் "அர்ஜுனா நானும் நீயும் எல்லோரும் முன்பு உண்டாயிருந்தோம். இப்போதும் இருக்கிறோம், இனியும் இருப்போம், அதாவது யாரும் இங்கு புதியதாக வந்தவர்கள் இல்லை. எல்லோரும் இங்கே உள்ளவர்கள், இந்த பூமி உண்டாவதற்கு முன்பும் இருந்தோம், இனியும் இருப்போம். பூமி போனாலும் நாம் இருப்போம்.

தேகங்கள் அனைத்தும் தோன்றியவாறு அழியும். எது ஓயாது தகனமாய் கொண்டிருக்கிறதோ அது தேகம். தேகங்களுக்குள் குடியிருக்கும் ஆத்மா அழிவற்றது. முக்காலத்திலும் அது பொதுவாய் இருக்கிறது. ஒரு காலத்திலிருந்து இன்னொரு காலத்தில் இல்லாமல் அது போய்விடுவதில்லை. **"ஆத்மா நித்யஹ அனாத்மா அநித்யஹ"**

**உறங்கு வதுபோலும் சாக்காடு உறங்கி**
**விழிப்பது போலும் பிறப்பு (குறள் 339)**

**பொருள் :** *இறப்பு என்பது உறக்கம் வருவதைப்போன்றது. பிறப்பு என்பது உறக்கம் நீங்கி விழித்துக்கொள்வது போன்றது.*

**தேஹிநோஸ்மிந் யதா$^{2}$ தே$^{3}$ஹே கௌமாரம் யௌவநம் ஜரா/**
**ததா தே$^{3}$ஹாந்தரப்ராப்திர் தீ$^{4}$ரஸ்தத்ர ந முஹ்யதி//**

**(கீதை 2-13)**

**பொருள் :** *எப்படி ஜீவாத்மாவுக்கு இந்த உடலில் இளமையும், வாலிபபருவமும், முதுமையும், வருகின்றனவோ அப்படியே வேறு உடலும் வந்து சேர்கிறது. இவ்விஷயத்தில் தீர புருஷன் கலங்குவதில்லை.*

*ஒருவன் குழந்தையாக பிறந்து பிறகு காளையாகி பிறகு கிழவனாகிறான். இந்த மாறுதல்கள் மனித உடலில் தான் உண்டாகிறது. இந்த உடல் ஒவ்வொரு விநாடியும் மாறிக்கொண்டே இருக்கிறது. நம்முடைய விஞ்ஞானிகள் ஏழுவருடத்தில் ஒரு மனிதனின் உடல் முற்றிலும் மாறிவிடுகிறது என்றும் பழைய ரத்தத்தில் ஒரு துளிகூட எஞ்சியிருப்பதில்லை என்றும் கண்டுபிடித்துள்ளார்கள். ஒருவன் பலவருடங்களாக தன் தாயைப் பிரிந்திருந்து பின் போய் பார்த்தபோது தன் தாய்க்கே அடையாளம் தெரியவில்லையாம். மாறுதல் யாவும் உடலினுடையதுதான். ஆத்மாவிற்கு எந்தவித மாறுதல்களும் ஏற்படுவதில்லை என்று அறிபவன் தீரன் என்கிறார் பகவான். ஒரு உடலுக்கு மரணம் அடைந்ததும் அதில் இருந்த ஆத்மா வேறு உடலை அடைகிறது. அறிஞன் இதைக்கண்டு மனம் சோரமாட்டான் என்கிறார் பகவான். மாறுகின்ற உடலிலே மாறாதவனாக நான் (ஆத்மா) இருக்கிறேன்.*

கீதை தொடரும் ....

**வாசகர்கள் கவனத்திற்கு :** *வேதபாரதி செய்திகள் படித்துவிட்டு நிறைய நண்பர்கள் தொலைபேசி மூலமாக கருத்துக்களை என்னிடம் தெரிவிக்கிறார்கள் தயவு செய்து வாட்ஸ்அப் மூலம் பதிவு செய்தால் மட்டுமே புத்தகத்தில் வாசகர் கடிதத்தில் பதிவு செய்ய முடியும். 9443495950*

# நாலடியார்

*"ஆலும் வேலும் பல்லுக்குறுதி*
*நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி"*

**பொருள் :** *ஆலமரத்தின் குச்சியாலும் வேலமரத்தின் (வேப்பமரம்) குச்சியாலும் பல் துலக்கினால் பற்கள் உறுதியாகும். அது போல நான்கு அடிகளால் ஆன நாலடியாரையும், இரண்டு அடிகளாலான திருக்குறளையும் கற்று அதன்படி வாழ்ந்தால் சொல்வன்மையும் உறுதியும் பெறுவார்கள்.*

*நீதி கருத்துக்களைக் கூறுவதில் திருக்குறளும், நாலடியாரும் ஏறக்குறைய ஒரே முறையைப் பின்பற்றுகின்றன. தமிழகத்தில் சங்கம் மருவிய காலத்தில் வெவ்வேறு புலவர்களால் இயற்றப்பட்ட 18 நூல்களை ஒன்றாக சேர்த்து* **"பதினெண் கீழ்க்கணக்கு"** *என வழங்கப்பட்டன. திருக்குறளும் நாலடியாரும் பதினெண் கீழ்க்கணக்கில் வருகின்றன. திருக்குறளைப் போன்றே நாலடியாரும் "அறத்துப்பால்" "பொருட்பால்" "காமத்துப்பால்" என்னும் முப்பிரிவுகளை உடையதாக விளங்குகிறது. நாலடியாரை இயற்றியது சமண முனிவர்கள் நானூறு பேர்.*

**"வேதபாரதி செய்திகள்"** *வாசகர்களுக்காக இந்த மாதம் முதல் மாதாமாதம் இந்தப் பகுதியில் நாலடியாரிலிருந்து இரண்டு பாடல்கள் விளக்கத்துடன் அளிக்கப்படும். வாசகர்கள் படித்து அதன்படி வாழ்ந்து பயன்பெறவும்.*

**நின்றன நின்றன நில்லா என உணர்ந்து**
**ஒன்றின ஒன்றின வல்லே செயின் செய்க**
**சென்றன சென்றன வாழ்நாள் செறுத்துடன்**
**வந்தது வந்தது கூற்று. (நா 1-4)**

*நிலையானவை என்று நாம் நினைத்துக்கொண்டிருக்கும் பொருட்கள் நிலையில்லாமல் அழிந்துவிடும் என்பதை உணர்ந்து நம்மால் செய்யக்கூடிய அறங்களை, தர்மங்களை செய்ய நினைக்கும்போதே விரைவில் செய்ய வேண்டும் ஏனென்றால் எமன் கோபித்து வந்துக்கொண்டேயிருக்கிறான்.*

தொகுப்பு : **பரிதி**

*இந்தப் பகுதி தொடர்ந்து வெளிவர ஆதரவு தருபவர்*
**ப்ரம்மஸ்ரீ முனீஸ்வர சாஸ்திரிகள்,** *வேளச்சேரி*

# தடுப்பு மருந்தின் கதை

“கொரோனா” தடுப்பூசி வழங்குவதில் இந்தியா சாதனை படைத்துள்ளது” என தொலைக்காட்சியில் breaking news அலறிக்கொண்டிருந்தது.

“ஐயா, ஜாலி vaccine injection போட்டுட்டா நாம எங்க வேணும்னாலும் போலாம், இல்லையா அப்பா” என்றாள் எட்டு வயது இரட்டை வால் காவ்யா.

“ஆமா கண்ணா, ஆனா நம்ம எல்லாருக்கும் vaccine கிடைக்க இன்னும் கொஞ்சம் மாசம் ஆகும்’’ என்றார் காவ்யாவின் தந்தை ராஜா.

“ஓ, அப்படியா, ஓகே ஓகே vaccine injection போட்டா அது எப்படி work ஆகும்” என தன் விழிகளை உருட்டிக்கொண்டு வினவினாள்.

‘‘நல்ல கேள்வி காவ்யா குட்டி’’, என் கிட்ட உக்காந்துக்கோ, நீ கட கடனு சாதம் சாப்பிட்டு முடிக்கறதுக்குள்ள நான் உனக்கு சொல்லித் தரேன்

“சரிப்பா, இதோ வரேன்” என ஓடி வந்தாள் காவ்யா.

அப்பா சாதத் தட்டையும், ஸ்பூனையும் காவ்யாவின் முன் வைத்துவிட்டு கதை சொல்ல ஆரம்பித்தார்.

""vaccineகு தமிழ்ல என்ன சொல்வாங்க தெரியுமா, காவ்யா குட்டி.

“ஏதோ தடுப்பு something" “அது வந்து தடுப்பு ஊசி, தமிழ்ல நிறைய வார்த்தைகளுக்கு காரணப்பெயர் அருமையா இருக்கும்.

தடுப்பு ஊசினா வியாதியை தடுக்கும் ஊசி, அவ்வளவுதான்”

“ஓ ஓகே, எப்படித் தடுக்கும்? அப்பா

“அததான், நான் உனக்கு சொல்ல போறேன் இப்ப நம்ம ஊருக்கு திருடன், கொள்ளைக்காரன் எல்லாம் வராம யார் பாத்துகறா?”

“ம்... போலீஸ், செக்யூரிட்டி”

“கரெக்ட், அதே மாதிரி நம்ம உடம்புக்கு நோய் வராம

பார்த்துகறது நம்ம எதிர்ப்பு சக்தி, Immunity னு சொல்வாங்க இல்லையா”

“ஆமா, நான் Adல பாத்துருக்கேன்”

“யெஸ், இப்போ தடுப்பூசி எப்படி வேலை செய்யுதுனு சொல்லட்டுமா?, உனக்கு வைரஸ், பாக்டீரியா எல்லாம் தெரியுமா?”

“covid வைரஸ் தெரியும்பா, பாக்டீரியா எங்கயோ கேட்டுருக்கேன்”

“இதையெல்லாம் micro organismsனு சொல்வாங்க,

தமிழ்ல நுண்ணுயிர்கள். பாக்டீரியா-வையே நம்ம கண்ணால பார்க்க முடியாது, வைரஸ் அதைவிட ரொம்ப சின்னது. பாக்டீரியா, வைரஸ் லாம அப்போ எப்படி பார்க்கறது?”

“ம்... zoom lens ஆ”?

‘‘ஹா ஹா, கிட்டத்தட்ட அதமாதிரி உள்ள மைக்ரோஸ்கோப்ல தான் பார்க்கலாம், அதும்

வைரைஸை நார்மல் மைக்ரோஸ்கோப்ல study பண்ண முடியாது, எலக்ட்ரான் மைக்ரோஸ்கோப் வேணும்”

“அப்ப நம்ம எலக்ட்ரான் மைக்ரோஸ்கோப் வாங்கி வச்சுக்கலாம், easyஆ வைரஸ் எங்க இருக்குனு தெரிஞ்சுடும் ல, அப்பா”.

“கரெக்டான கேள்வி தான்!! ஆனா அதுக்கு பெரிய லேப் செட் அப் வேணும் வீட்ல வச்சுக்க முடியாதுடா. சரி

நீ அப்படியே சாப்டுட்டே கேக்கணும்”

“ஓகே, vaccine என்ன பண்ணும், வைரஸோட ஃபைட் பண்ணுமா, நான் ஒரு டுத்பேஸ்ட் Adல பார்த்தேன்.

“நிறைய T.V. பார்க்கிறபோல இருக்கே”

""T.V. இல்லபா யூடியூப் Ad காவ்யாவின் கண்கள் சிரிப்பில் மின்னின”.

“டேய் vaccine ஏ வைரஸ் தான் தெரியுமா”

“என்னது, அப்ப நான் கண்டிப்பா அந்த injection போட்டுக்க மாட்டேன்”

“இரு இரு நான் சொல்றேன், வைரஸோட ஒரு பார்ட்,

இல்லாட்டி DNA / RNA இல்லாட்டி inactive வைரஸ். இதைப் போல நிறைய மெதடல vaccine உருவாக்கறாங்க.

“நம்ம உடம்பு என்ன பண்ணும், vaccine போட்ட உடனே, நிஜ வைரஸ் தான் வந்துருக்குனு அதுக்கு fight பண்ற Anti bodies போலீஸ் மாதிரினு சொன்னேன் இல்லையா அத உருவாக்கிடும். Vaccine ல இருக்கிற virus அல்லது அதோட பார்ட் எதிர்ப்பு சக்தியை மட்டும் உருவாக்கும் ஆனா அந்த நோயை ஏற்படுத்தாது.

அப்போ நெஜமா covid virus attack பண்ண வரும்போது, நம்ம போலீஸ் இருக்குல Antibodies, fight பண்ணி வைரஸை kill பண்ணிடும்”.

‘‘ஓ wow அப்படியா, vaccine யாரு ஃபர்ஸ்ட் கண்டுபிடிச்சாங்க” “பெரிய அம்மைனு ஒரு நோய் இருக்கு தெரியுமா, smallpox. அதோட தடுப்பூசி 1796ல Edward Jenner னு ஒரு British doctor முதல்ல கண்டுபிடிச்சார். அதுக்கு அப்புறம் நிறைய ஆராய்ச்சி பண்ணி வேறவேற நோய்களுக்கெல்லாம் தடுப்பூசி சயின்டிஸ்ட்ஸ் உருவாக்கி இருக்காங்க”

“Scientists are great, இல்லப்பா”

""Yes correct கண்ணா”

“எனக்கு இப்பவே vaccine வேணும், அப்பதான் நான் happy ஆ இருக்க முடியும்”

“கண்டுபிடிச்ச covid vaccine first doctors, medical professionals, police இவங்களுக்கெல்லாம் மொதல்ல கொடுப்பாங்க.

இப்படிப்பட்ட பேண்டமிக் டைம்ல யாரு எல்லா மக்களுக்கும் ஹெல்ப் பண்ணாங்க? அவங்க இல்லாட்டி நம்ம இருக்கவே முடியாது” correct ஆ

“ஓகே பா, கரெக்ட்”

என்னைக்கும் போல இல்லாம ‘‘எங்கிட்ட பேச்சு கேட்டுடே அழகா சாப்டு முடிச்சுட்டியே, குட் கேர்ள்”

அச்சிறுமூளைக்குள் அறிவியலின் ஆச்சரியங்களை உணரச் செய்த திருப்தியுடன் சிரித்தார் ராஜா.

**வெ.சிவசங்கரி**

FORM IV

Statement about ownership and other particulars about newpaper
VEDABHARATHI SEITHIGAL as required to be published under Sec. 19--D
Sub sec (b) of the Press and Registration of Books Act read with Rule 8 of the
Registration of New Papers ( Central Rules ) 1956

| | |
|---|---|
| 1 Place of publication | Chennai |
| 2 Periodicity of Publication | Monthly |
| 3 Printer's Name<br>Nationality<br>Address | R.Gowthama Sankar<br>Indian<br>Sabanayakam Printers,<br>No 39, Millers Road,Kilpauk<br>Chennai- 600 010. |
| 4 Publisher's name<br>Address | R.VENKATARAMAN<br>No 27, F-1, Pillaiyar Kovil St.,<br>Annai Indira Nagar,<br>Velachery,<br>Chennai- 600042 |
| 5 Editor's Name<br>Nationality<br>Address | R.VENKATARAMAN<br>No. 31, Seshadripuram 7th Main Rd<br>Baby Nagar,<br>Velachery,<br>Chennai- 600 042 |
| 6 Name and Address of New paper and partners holding More than one percent of the total capital | VEDABHARATHI SEITHIGAL<br>No 27, F-1, Pillaiyar Kovil St.,<br>Annai Indira Nagar,<br>Velachery,<br>Chennai- 600042 |

I,R.Venkataraman, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Chennai - 600042 31-03-2021 ( Sd ) R.Venkataraman

# சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹா ஸ்வாமிகள் அருளியவை

## தக்கத் தருணத்தில் இறைவன் தண்டிப்பார்



குழந்தைப் பேறு இல்லாத ஒரு தம்பதியர் ஒரு கிராமத்தில் வசித்து வந்தனர். கணவனைக் காட்டிலும் மனைவிக்குத்தான் எப்படியாவது குழந்தையைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று மிகுந்த ஆவல் இருந்தது. ஏனெனில், அவளுடைய தாய்மை உணர்வுகள் அவளை அப்படித் தூண்டிக் கொண்டிருந்தன. தான் தாய்மையடைவதற்கு ஏதாவது பரிகாரம் செய்ய வேண்டுமா என்று பலபேர்களிடம் கேட்டுக் கொண்டிருந்தாள் அவள், கணவனுக்கோ, தனக்கு குழந்தை பிறக்கும் என்ற நம்பிக்கை முழுவதும் போய்விட்டது. ஒரு நாள், வழக்கம் போல் மனைவி குழந்தைக்காக யோசனை கேட்ட போது ஒருவர், "நீ ஒரு குழந்தையைக் கொன்று அந்த இரத்தத்தில் குளித்தால் உனக்கு குழந்தை பிறக்கும்" என்று கூறிச் சென்றுவிட்டார். இவ்விஷயத்தை மெதுவாக அவள் தன் கணவனிடம் கூறினாள். "இப்படிப்பட்ட ஒரு காரியத்தை நினைத்துக்கூட பார்க்கக் கூடாது" என்று கூறி அவன் அவளைக் கடிந்து கொண்டான்.

ஒருவருடம் கழிந்ததும் அவள் கர்ப்பமுற்றாள். உரிய காலத்தில் நல்ல அழகான ஒரு குழந்தையையும் அவள் பெற்றெடுத்தாள். தங்கள் எண்ணம் நிறைவேறியதில் அத்தம்பதியர் மிக்க மகிழ்ச்சியுடன் குழந்தையைக் கொஞ்சிக் குலாவினர். கணவன் மனைவியைப் பார்த்து, "பலி கொடுப்பதெல்லாம் வேண்டாம் என்று நான் சொன்னேன். நீயும் என் சொற்படியே நடந்து கொண்டாய். இதனால் இறைவன் மனம் குளிர்ந்து நமக்கு ஒரு சுட்டியான குழந்தையை அளித்திருக்கிறார் பார்த்தாயா?" என்று கூறினான். இதைக் கேட்டதும் அவள் சிறிது தயக்கம் காட்டினாள். அவள் ஏதோ தன் மனதில் மறைத்து வைத்திருக்கிறாள் என்பதைப் புரிந்துக்கொண்ட கணவன், அவளைப் பார்த்து, "தயக்கம் இல்லாமல் சொல்" என்று சொன்னான்.


தொடரும்...

ஓம் நமோ பகவதே வாஸுதேவாய,
ஓம் நமோ நாராயணாய.

# ஸ்ரீமத் பாகவதம்

பரிதி

பகுதி - 3



வியாசர் தனது குருவான நாரதரின் கட்டளைப்படி பகவான் ஸ்ரீகிருஷ்ணரின் லீலைகளை ஸ்ரீமத் பாகவதத்தின் வடிவில் உலகிற்கு அருளினார். **“ஸ்ரீமத் பாகவதம்” = “ஸ்ரீமத்”** என்றால் மிக அழகானது, அல்லது மிகச் சிறந்தது, புகழ்வாய்ந்தது என்று பொருள். **“பாகவதம்”** என்றால் பகவானிடமிருந்து வருவது அல்லது பகவானுடன் தொடர்புடையது என்று பொருள் “ஸ்ரீமத் பாகவதம் பதினெட்டு புராணங்களில் ஒன்று. பதினெட்டு புராணங்களை ஆறு ஆறாகப் பிரிப்பார்கள். **ஸாத்விக** புராணங்கள் ஆறு, **ராஜஸ** புராணங்கள் ஆறு, **தாமஸ** புராணங்கள் ஆறு. இதில் ஸாத்விக புராணங்களில் சிறப்பு வாய்ந்தது பாகவத புராணம். இதை “ஸ்ரீமத் பாகவதம்” என்று பெரியோர்கள் கூறுவார்கள். ஐந்தாவது வேதமான மஹாபாரதத்தின் தொடர்ச்சியாக இந்த புராண கதை ஆரம்பிக்கிறது. இந்த புராணத்தில் 12 ஸ்கந்தங்களும், 336 அத்தியாயங்களும், 18,000 ஸ்லோகங்களும் உள்ளன. ஸ்ரீமத் பாகவதத்தின் உருவில் ப்ரத்யக்ஷமாக பகவான் ஸ்ரீ கிருஷ்ணரே இருக்கிறார்.

**நிகம கல்பதரோர் களிதம் பலம் ஸுகமுகாதம்ருதத்ரவ ஸம்யுதம்**
**பிபத பாகவதம் ரஸமாலயம் முஹுரஹோ ரஸிகா: புவி பாவுக:**
**(பா 1-1-3)**

ஸ்ரீவேதவ்யாஸர் ஸ்ரீமத் பாகவதத்தை **“வேத சாஸ்திரங்கள்”** என்னும் மரத்தில் கனிந்து கீழே விழுந்த பழம் என்கிறார். ஒரு மரம் என்றால் அதில் முக்கிய பகுதி அதில் பழுக்கும் பழம்தான். பொதுவாக ஒரு மாம்பழம் என்றால் அதை சாப்பிடும் முன் நாம் அந்த பழத்தின் காம்பையும், மேல் தோலையும் கொட்டையையும் நீக்கிவிட்டு சதையை மட்டும்தான் சாப்பிடுவோம். ஆனால் இந்த வேதமாகிற மரத்தில் பழுத்த “ஸ்ரீமத் பாகவதம்” என்னும் பழத்தில் விலக்குவதற்கு ஏதும் கிடையாது. அது அமிர்தம் நிறைந்த ஒரு பழம் என்கிறார் ஸ்ரீவேதவ்யாஸர். அமிர்தத்தை சாப்பிட்டால் மரணம்

உண்டாகாது என்பார்கள். தற்போது நமக்கு அமிர்தம் கிடைக்காது. ஆனால் ஸ்ரீமத் பாகவத ரூபத்தில் நமக்கு அமிர்தம் கிடைக்கும். அந்த அமிர்தத்தை சாப்பிட்டால், அதாவது ஸ்ரீமத் பாகவதத்தை தினமும் சிறிது நேரம் படித்தால் நமக்கு மரணம் உண்டாகாது. அதாவது மோக்ஷம் கிடைக்கும். புராணம் என்றால் படிப்பார்கள், சொல்லுவார்கள் அல்லது பிறர் சொல்ல கேட்பார்கள். ஆனால் இங்கு ஸ்ரீவேதவ்யாஸர் **"பிபத பாகவதம்",** பாகவதம் என்கின்ற ரஸத்தை காதுகள் வழியாக குடியுங்கள் என்கிறார். முக்தி கிடைக்கும் வரையில் குடியுங்கள் என்கிறார்.

ஸ்ரீமத் பாகவதம் பக்தி மார்க்கத்தைப் பற்றிதான் கூறுகிறது. பக்தன், பகவான் இருவரைப்பற்றியும் இந்த ஸ்ரீமத் பாகவதம் விளக்கமாக கூறுகிறது. வேதம் படிக்கவேண்டும் என்று விரும்புகிறவர்கள் இந்த ஸ்ரீமத் பாகவதத்தை படித்தால் போதும். "ஆத்யாமிகம்", "ஆதி தெய்வீகம்" "ஆதி பௌதீகம்" ஆகியவற்றால் ஏற்படும் துக்கங்களும் தாபங்களும் ஸ்ரீமத் பாகவதம் படிப்பதாலும் கேட்பதாலும் நீங்கிவிடும், ஸ்ரீமத் பாகவதம் படிக்கும்போதே பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் நம் உள்ளே ஆவிர்பவிப்பார்.

"ஸ்ரீமத் பாகவதம்" எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னால் எழுதப்பட்டதானாலும் அது இன்றைய நம்முடைய வாழ்க்கையை மாற்றி அமைக்கக்கூடிய ஒரு "கிரந்தகம்". இது ஒரு கதையைக் கூறும் "கிரந்தம்" அல்ல. பகவான் ஸ்ரீகிருஷ்ணரின் லீலைகளை மட்டும் கூறும் ஒரு நூல் அல்ல. அப்படியானால் பாகவதம் என்பது என்ன? இது நம்முடைய மனதை நமக்கு புரியவைத்து தளர்ந்த நம்முடைய மனதை உயர்த்தவும் அல்லது தளர்ந்த மனதை உயர்வதற்கு உதவும் ஒரு வழிகாட்டி (கைட்) அல்லது "சாஸ்திரம்". நம்முடைய சொந்த வாழ்க்கையில் நம்மை நாமே மாற்றி அமைத்துக்கொள்ள உதவக்கூடிய ஒரு ஆத்யாத்மிக "வழிகாட்டி". நம்முடைய மனதை எப்படி உயர்த்திக் கொள்ள வேண்டும் என்று தத்துவார்த்தமாக கூறினால் நம்மால் புரிந்துகொள்ள முடியாது. அதனால். முற்காலத்தில் கஷ்டங்களையும், துன்பங்களையும், வேதனைகளையும் சோதனைகளையும் அடைந்த மனிதர்கள் தங்கள் மனதை எப்படி மாற்றிக்கொண்டார்கள் என்பதை கதையாக நமக்கு கூறி அதில் அவர்கள் தெரிந்துகொண்ட தத்துவங்களையும் நமக்கு கூறி நாமும் அதேபோல் நம் வாழ்க்கையிலும் உயர்வதற்கான வழிகளைக் காட்டுவதுதான் "ஸ்ரீமத் பாகவதம்". (தொடரும்...)

# தர்மத்தின் குரல்
# பூஜ்யஶ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகள்

## அத்தியாயம் 3 : வேதங்கள்

ஆன்மா, உடலிலிருந்து முழுமையாக மாறுபட்டது. அது ஆதியற்றது. இறப்பிற்குப் பிறகு, தான் செய்த புண்ணியத்திற்கேற்ப ஸ்வர்க்கத்தையோ பாபத்திற்கேற்ப நரகத்தையோ அடைகிறது. பின்னர் புது உடலெடுத்து, இப்புவியை மீண்டும் அடைகிறது. ஜீவனின் மறுபிறப்பைப்பற்றிய இக்கருத்துக்களெல்லாம், முந்தைய அத்தியாயத்தில் விவாதிக்கப்பட்டன. முதல் அத்தியாயத்தில் தெய்வங்கள், ப்ரஹ்மன், அதன் இயல்புகள் ஆகியவை விளக்கப்பட்டன. இந்த விவாதங்களெல்லாம் பெரும்பாலும் அனுமானத்தை ஒட்டியே அமைந்தன. ஆனால், எல்லா விஷயங்களையும் அனுமானத்தின் அடிப்படையிலேயே விவாதிக்க முடியாது. உதாரணமாக, ஸ்வர்க்கமும் நரகமும் அவ்வாறு விவாதிக்கப்பட முடியாதவை. கனவுகளின் உதாரணத்தைக் காட்டி விவாதம் செய்தாலும், அவற்றை ஏற்றுக் கொண்டது, வேதங்களின் அடிப்படையிலேயே. வேதங்களின் சிறப்பு என்னவென்றால், அவற்றின் கூற்றுகள் அனுமானத்தாலோ அனுபவத்திலோ சரிபார்த்துக் கொள்ளக்கூடியன என்பதே.

அதனால்தான், நம்நாட்டு மக்கள் எல்லோரும் வேதங்கள்மேல் பக்தியும் விசுவாசமும் கொண்டவர்களாக இருக்கின்றனர். வேதங்களின் மீதான அவர்களின் நம்பிக்கையின் ஆழம், அவர்களின் சாதாரணப் பேச்சு வழக்கிலும் பிரதிபலிக்கிறது. யாராவது ஒருவர் தன் வார்த்தையைக் காப்பாற்றத் தவறியதாகக் குறை சொல்லப்படும்போது, அவரின் பதில் “அதனாலென்ன, என் வார்த்தை, வேதமா என்ன?” என்றாவது இருக்கும்.

தொடரும்.....

# புதுவை வேதபாரதியின் தனுர்மாத நாமசங்கீர்த்தன நிறைவு விழா

*இந்தாண்டு தனுர்மாத நாம சங்கீர்த்தன நிறைவுவிழா கடந்த 15.01.2021 வெள்ளிக்கிழமை மாட்டுப் பொங்கலன்று மாலை 5.30 மணியளவில் புதுச்சேரி, ஈ.சி.ஆர். சாலை, ஸ்ரீ சங்கர வித்யாலயா மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது.*

*கிட்டத்தட்ட மூன்றரை மணி நேரம் நடைபெற்றவிசேஷ நாம சங்கீர்த்தன நிகழ்ச்சியை ப்ரம்மஸ்ரீ டாக்டர். உடையாளூர் கல்யாணராம பாகவதரும் அவரது குழுவினரும் நடத்திக் கொடுத்தார்கள். கொரோனா தாக்கத்தின் காரணமாக சுமார் 10 மாதங்களுக்கு பிறகு அவர் கலந்துகொண்ட முதல் பொது நிகழ்ச்சி.*

*மிகப் பெரிய பள்ளி வளாகத்தில் அமர்வதற்கு இடம் இல்லை என்றளவில் அரங்கு நிறைந்திருந்தது. தமிழ்நாடு வேதபாரதி பொதுச் செயலாளர் ஸ்ரீ ஆர். வெங்கட்ராமன் அண்ணா அவர்களது குழுவினரோடு சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டனர்.*

*அரங்கு நிறைந்த இந்நிகழ்ச்சியின் கடைசிவரை சற்றும் நகராமல் பார்வையாளர்கள் பகவான் நாமாவை ருசித்தது மிகச்சிறப்பு.*

*விழாவில் காஞ்சி பெரியவா திருப்படத்தை தமிழ்நாடு வேதபாரதி செயலாளர் திரு. ஆர்.வெங்கட்ராமன் அவர்கள் வெளியிட ப்ரம்மஸ்ரீ டாக்டர்.உடையாளூர் கல்யாணராம பாகவதர் அவர்கள் பெற்றுக் கொண்டார். நிறைவில் இத்திருப்படத்தை விழாவில் கலந்துகொண்ட ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட்டது.*

*இந்த நிகழ்வில் கலந்து கொண்ட அனைத்து சுமங்கலிகளுக்கும் சுமங்கலி தாம்பூலம் வழங்கப்பட்டது. தாம்பூலப்பையில் குங்குமம், மஞ்சள் கிழங்கு, ஜாக்கட் பிட் ஆகியவை கொடுக்கப்பட்டன. இந்த மூன்று பொருட்களும் வெறும் தாம்பூலப் பொருட்களாக இல்லாமல் பிரசாதமாக கொடுக்கப்பட்டதே இதன் சிறப்பு. இதற்காக காஞ்சிபுரம் சென்று லோகமாதா அருள்மிகு காமாட்சியம்மன் திருப்பாதத்தில் வைத்து பிரார்த்தனை செய்து*

கொண்டுவந்தார். சென்னை வழக்கறிஞர் திருமதி. உமா சேஷாத்திரி அவர்கள்.

ப்ரம்மஶ்ரீ டாக்டர். உடையாளூர் கல்யாணராம பாகவதர் குழுவிற்கான சம்பாவனையை "பாரதி சாமாராவ்" குடும்பம் சார்பாக சென்னை, பிரபல ஆடிட்டர் திரு.குமரகுரு அவர்கள் வழங்கினார்.

நிகழ்ச்சியின் நிறைவில் அனைவரும் வீட்டுக் கவலையை மறந்து சுவையான உணவு புசித்தனர். உணவு வகைகளும், ருசியும் "அன்னபூரணியே" அவதாரமாகி இருந்ததுபோல் உணர்வினை கொடுத்தது. திருமதி.ஜெயஶ்ரீ வரதராஜன், திருமதி.அனுராதா கணேசன் ஆகிய இருவரும் இப்பகுதியை ஏற்றுக் கொண்டனர்.

தாமாக முன்வந்து ஒவ்வொரு செலவுகளையும் இவர்களைப் போன்றோர் ஏற்றுக் கொள்ளும் செயல் "வேதபாரதியின்" பாதை தவறாத பயணத்திற்கான அங்கீகாரமாகவும் ஊக்கமளிப்பதாகவும் இருக்கிறது. மொத்தத்தில் கடந்த 10 மாத கொரோனா தாக்கக் காலத்தில் பெரிய மனநிறைவை அளித்த நிகழ்ச்சியாகும்.

ஆதிரையன்.



# AURO MIRA MEDI AIDS

*House of Home Healthcare Products*

- Breast Pumps
- Blood Glucose Meters
- BP Meters
- Alpha Beds
- Adult Diapers
- Under Pads
- Wheel Chairs
- Physio Products
- Home Sleep Study
- Oxygen Concentrator
- CPAP / Bi Pap
- Pulse Oxymeters
- Nebuliser
- Morning Walker
- Weighing Scale
- Air Purifier




முதியோர்களை சிறப்பாக பராமரிக்க தேவையான மருத்துவ உபகரணங்கள் எங்களிடம் சலுகைவிலையில் கிடைக்கும்.

New No.36, Old No.32, Sriram Nagar Main Road,
Near I.I.T. Taramani, Chennai - 600 113.
**9382159199 | auromiramediaids@gmail.com**
**www.auromiramediaids.in**

# ஸ்ரீ மாதா டிரஸ்ட்

2000-ஆம் ஆண்டு முதல் ஏழை புற்றுநோயாளிகளின் துயர் தீர்க்கும் **"இலவச காப்பகம்"**



V.KRISHNAMOORTHY
Managing Trustee



P. AKASHRAM
Executive Trustee



அடையாறு புற்றுநோய் மருத்துவ மனைக்கு வரும் வெளியூர் ஏழை புற்றுநோயாளிகளின் சிகிச்சைக்கு வறுமை ஒரு தடைக்கல்லாக இருந்து விடக் கூடாது என்பதற்காகவே ஸ்ரீ மாதா டிரஸ்ட் நிர்வகிக்கும் நம்ம தர்மசாலாவில் ஏழை புற்று நோயாளிகளுக்கும் அவரது ஒரு உதவியாளருக்கும் தங்குமிடம்; மூன்று வேளை சத்தான உணவு ஆகியவை முற்றிலும் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது.



நம்ம தர்மசாலாவில் பசியாறும் ஏழை புற்றுநோயாளிகள்

ஏழை புற்றுநோயாளிகளை காக்கும் சேவையைத் தொடர்வதுடன், மற்றுமொரு முயற்சியாக ஸ்ரீ மாதா டிரஸ்ட் முற்றிலும் இலவசமாக செயல்படுத்த உள்ள **ஸ்ரீ ஜயேந்த்ர பெரியவா நினைவு முதியோர் இல்லம்** சுமார் 30,000 சதுரஅடி (தரைதளம் மற்றும் 2 தளங்கள்) பரப்பளவில் சகல வசதிகளுடன் சுமார் ரூபாய் **ஆறு கோடி** செலவில் சென்னை-திருச்சி தேசிய நெடுஞ்சாலையில், செங்கல்பட்டுக்கு அடுத்த மாமண்டூரில் அமைய உள்ளது. அம்முதியோர் இல்லத்திற்கு கட்டிட நிதியாக **ரூ.**5,00,000/- நன்கொடை வழங்குவோர் விரும்பும் பெயரில் தங்கும் அறை ஒன்று அமைக்கப்படும். மேலும், தங்கள் விருப்பத்திற்கேற்ப நன்கொடை வழங்குவோரின் பெயர்களும் முறையாக பதிவு செய்யப்படும்.



தங்களது சொத்துகளுக்கு வாரிசு இல்லையே என்று ஏங்குவோர் இந்த இல்லத்திற்கு உதவி செய்து தங்களது மன வேதனையை நிரந்தரமாய் நிவர்த்தி செய்துகொள்ள முடியும்.மேலும், ஊசி முனையளவும் உங்கள் மீது அன்பு காட்டி உதவி செய்யாத உறவினர்களுக்கும், வளர்ப்புகளுக்கும் அவர்களது சந்ததிகளுக்கும் உங்கள் சொத்து மொத்தமாக சென்று சேர்வதைக் காட்டிலும் இந்த நற்செயல் புண்ணியம் அல்லவா? **சிந்திப்பீர்..! இன்றே செயலாற்றுவீர்..!**






தள்ளாமையிலும் தளராத தாராள மனம்... இல்லாமை இல்லாமல் செய்திட துடிக்கும் தயாள குணம்... ஆகியவற்றுக்குச் சொந்தக்காரரான ஸ்ரீரங்கத்தைச் சேர்ந்த திரு **நாராயணசாமி** அவர்கள் நம்ம தர்மசாலாவில் தங்கியுள்ள ஏழை புற்றுநோயாளிகளுக்கு உணவு வழங்கிட ரூபாய் ஒரு லட்சம் நன்கொடை வழங்கி மகிழ்ந்தார். மேலும், ஸ்ரீ மாதா டிரஸ்ட் செயல் படுத்தவிருக்கும் ஸ்ரீ ஜயேந்த்ர பெரியவா நினைவு முதியோர் இல்ல கட்டிட நிதிக்கும் தாராள நன்கொடை வழங்குவதாக நம்பிக்கை தரும் நல்வார்த்தை கூறியுள்ளார்.

**தங்களது நன்கொடையை இவ்வாறு வழங்கலாம்**

ரூ.1,00,000/- நிதியளித்து நிரந்தர காப்பாளர் ஆகலாம் ரூ.75,000/- நிதியளித்து வள்ளல் ஆகலாம்

ரூ.25,000/- நிதியளித்து "நம்ம தர்மசாலா"வின் ஒரு நாள் செலவினை ஏற்கலாம்

ரூ.10,000/- நிதியளித்து ஒரு நாள் உணவு செலவினை ஏற்கலாம்

ரூ.5,000/- நிதியளித்து மதிய / இரவு உணவு செலவினை ஏற்கலாம்

ரூ.3,000/- நிதியளித்து காலை உணவு செலவினை ஏற்கலாம்

Kindly send your contribution by CHEQUE / NEFT / M.O.

Account Name : SRI MATHA TRUST
Bank Name : INDIAN OVERSEAS BANK, Gandhi Nagar, Chennai-20
Current A/c No.:163502000001090 IFSC Code:IOBA0001635

Donations to our Trust is exempted U/S.80 (G) of the Income Tax Act

Admin Office: 95/6, Rams Apartment, 2nd Main Road, Gandhi Nagar, Adyar, [next to Harini Skin & Laser Clinic] Chennai - 600 020. Tel: 044 - 24420727, 42661687

Namma Dharmasala: 9, Yogi Garden, Sriram Nagar Main Road, Adjacent to IIT Compound, Near New Cancer Institute, Chennai-113. Tel: 044 - 4509 8647

Regd. Office: "Natha Kamalam", No.1-A, Periazhwar Street, Sundaram Colony, East Tambaram, Chennai - 600 059. 9500001065 / 9003247857

vkrishnamoorthy.smt@gmail.com www.srimathatrust.org


Rs.1000 inclusive of tax
Wopper
COMBO OFFER
This pack contains:
Liquid Detergent 1 L - 1 No
Floor Cleaner 500 ml - 2 Nos
Toilet Cleaner 500 ml - 2 Nos
Fabric Conditioner 500 ml - 1 No
Vessel Wash 500 ml - 1 No
Multipurpose Cleaner 100 ml - 1 No
Hand Wash 100 ml - 1 No
Hand Rub 100 ml - 1 No
FREE
Shri Meera Labs Pvt Ltd
Our Chemistry ... Your Success
Contact
9952972436 / 7824807801
www.woppershop.com
WOPPER
Fluid Chemistry

# பெற்றோர்களே! கவனியுங்கள்!
## (குழந்தை வளர்ப்பு)

காந்தலக்ஷ்மி சந்திரமௌலி பாகம் - 3 பகுதி - 3

*"ஆன்லைன் வகுப்புகள்'' என்றால் என்ன, எப்படி நடைபெறுகிறது என்று இதற்குள் நீங்கள் புரிந்து கொண்டிருப்பீர்கள்.*

*ஆனால் அத்தகைய வகுப்புகள் மாணவ மணிகளுக்கும், ஆசிரியர்களுக்கும் ஏற்படுத்தும் தாக்கத்தை நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.*

*அவர்கள் பார்ப்பதும், கேட்பதும், பேசுவதும் டி.வி. சீரியலோ அல்லது சினிமாவோ அல்ல. அது முழுமையாக, மிக கவனமாக கேட்க வேண்டிய பாடங்கள்.*

*பள்ளி அறையில் கண்கள் நான்கு பக்கமும் திருப்பி பார்க்க இயலும். ஆனால் இன்று "ஜூம்'' வழியாக பேசும் பொழுது ஆசிரியர்களின் முழு கவனமும் உங்கள் குழந்தையின் மீது தான் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.*

*பரீட்சை நேரத்தில் பள்ளியிலிருந்தால் "காப்பி'' அடிக்காமல் எந்தளவு கவனிப்பார்களோ அதே அளவு தான் ஆசிரியர்கள் மாணவர்களை கவனிக்கின்றனர். கேமரா மூலமாக!*

*இப்பொழுது குழந்தைகளின் "டென்ஷனை'ப் பற்றி யோசியுங்கள். காலை 8.30 மணியிலிருந்து பரீட்சை என்றால் 8.00 மணிக்கே அறை, மொபைல் / ஐ-பேட் தயாராக வேண்டும். பக்கத்தில் போய் நிற்பது, எட்டிப் பார்ப்பது, சாப்பிட்டாயா என்று "பாசம் பாராட்ட'' முனைவது எதுவும் கூடாது. கண்களை சிறிது திருப்பினாலே "என்ன காப்பி அடிக்கிறியா'' என்று ஆசிரியர் / ஆசிரியை அதட்டுவார்.*

*ஆசிரியர் தன் பணியை செய்யவும், மாணவர்களான உங்கள் குழந்தைகள் தங்கள் பணியை செய்யவும் நீங்கள் முழு ஒத்துழைப்பு நல்க வேண்டும்.*

*கணவரும் இதே "ஆன்லைன்'' பிரச்சனையில் தன் பணிக்காகப் போராட, தாய்மார்களும் பணியில் இருந்தால்*

*அவர்களும் அவஸ்தைப்பட, வீட்டில் உள்ள பெரியவர்கள் எதையும் புரிந்து கொள்ள இயலாமல் சீரியல்களை அலறவிட, வீட்டில் தினமும் மஹாபாரத யுத்தம் தான்!*

**“தாமின் புறுவ துலகின் புறக்கண்டு**

**காமுறுவர் கற்றறிந் தார்’’** **(அதிகாரம் – கல்வி, குறள் - 399)**

*“கல்வியில் சிறப்புடைய பெரியோர்கள் கற்க வேண்டியதை தான் கற்று, அறிய வேண்டியதை அறிந்தவர்கள் தாம் பெற்றஅறிவின்பங்களை உலகிலுள்ள அனைவரும் அடையும்படி பிறருக்கு கொடுத்து மகிழ்வார்கள்”.*

*எப்படியாவது “படித்தால் போதும்’’ என்று தான் பெற்றோர்கள் எண்ணுகிறார்கள். இது சரியான எண்ணம் தான். ஆனால் “எப்படியாவது’’ என்பது இங்கு பொருந்தாது. “இப்படித்தான்’’ என்பது தான் இன்றைய சூழலுக்குப் பொருந்தும்.*

*“கையுறையும், மாஸ்கும், விலகி இருப்பதும் காலத்தின் கட்டாயம்’’ என்பதால் அதை ஏற்றுக் கொள்கிறோம் என்பது போன்றே இன்றைய சூழ்நிலையால் பாதிக்கப்பட்டுள்ள குழந்தைகளின் மன நிலையை நாம் புரிந்து கொண்டு செயல்பட வேண்டும்.*

*பள்ளியிலிருந்து திரும்பும் பொழுது உடல் மட்டுமே தளர்ந்து போகும் ஆனால் இன்று “ஜும்’’ லிருந்து வெளிவரும் பொழுது – (பல மணி நேரங்கள் கழித்து) அறிவும், கூர்மையும், கண்களும், மனமும் சோர்ந்து விடுகின்றது.*

*பெற்றோர்கள் இதைப் புரிந்து கொள்ள தவறி விடுகின்றனர். ஏதோ பள்ளியிலிருந்து திரும்பி வந்த மாதிரி “என்ன ஆச்சு? டீச்சர் என்ன சொன்னா? எந்த பாடம் எடுத்தா?” என்று கேட்கக்கூடாது.*

*மிகச்சரியாக 45 நிமிட இடைவெளி விட வேண்டும். வீடு மௌனமாக இருக்க வேண்டும். பிறகு தான் அவர்களின் ஓயாது ஓடிக் கொண்டிருந்த புத்தி சற்றேஆசுவாசப்படுத்திக் கொள்ளும் எனும் மிக முக்கியமான விஷயத்தை கவனத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.*

*மேலும் என்ன பிரச்சினைகள் உள்ளன என்பதைப் புரிந்து கொள்ள பேசுவோம்.*

தொடரும்....

# மஹா பெரியவாளின் அற்புத விளக்கங்கள்

## ஷடங்கங்கள்



*ஹிந்து மதத்தின் ஆதாரப் புஸ்தகங்களில் வேதத்தின் ஆறு அங்கங்கள். இவற்றை "ஷட் (ஆறு) அங்கம்", "ஷடங்கம்" என்று சொல்லுவார்கள். சடங்கு என்று சொல்லுவது அந்த வார்த்தையில் இருந்து மருவி வந்ததுதான். அந்த ஆறு அங்கங்களாவன: சிக்ஷ (எழுத்திலக்கணம்), வியாகரணம் (சொல்லிலக்கணம்), நிருக்தம் (நிகண்டு), கல்வம் (கர்மாநுஷ்டான முறை) சந்தஸ் (பாவிலக்கணம்), ஜ்யோதிஷம் (சோதிடம்) என்பவை. பிராம்மணன் வேதங்களையும் இந்த ஆறு அங்கங்களையும் தெரிந்து கொள்ள வேண்டும். முதலில் வேதாத்யயனம் செய்ய வேண்டும். அந்த வேதத்திற்கு அர்த்தம் தெரிந்து கொள்ளும் பொருட்டு, இந்த ஆறு அங்கங்களையும் தெரிந்து கொள்ள வேண்டும். வேத புருஷனுக்கு சிக்ஷ மூக்கு; வியாகரணம் முகம் அதாவது வாய்; கலபம் கை; நிருக்தம் காது; சந்தஸ் பாதம்; ஜ்யோதிஷம் கண்; ஜோஸ்யம் என்பது ஜயோதிஷமே ஆகும். ஏன் இப்படி ஒவ்வொரு சாஸ்திரத்தை ஒவ்வொரு அவயமாகச் சொல்லியிருக்கிறது என்பதை அந்தந்த சாஸ்திரத்தைப் பற்றிச் சொல்லும்போது பார்க்கலாம்! பொருத்தமாகத்தான் இப்படி வைத்திருக்கிறார்கள் என்று தெரியும் முதலில் 'சிக்ஷ'யில் ஆரம்பிக்கலாம்.*

**தங்களின் எதிர்காலம் பற்றிய சந்தேகங்களை ஜோதிடம் மூலமாக ஜாதகம் பார்த்து பலன்களை துல்லியமாக அறிய தொடர்பு கொள்ளவும்**

**9500191417**

# "பாரத தேசப் புனித யாத்ரை"

திருச்சி **K.கணேசன்**

*'அத்யாயம் - 10'*

*சென்ற மாத தொடர்ச்சி...*

*அசோகர் கட்டிய மகாபோதி கோவில் காலத்தால் சிதிலமடைந்தாலும், புதுப்பிக்கப்பட்ட அதன் கோபுரத்தின் உயரம் சுமார் 170 அடியாகும். இங்கு அமர்ந்த நிலையில் பகவான் புத்தர் அமைதியே உருவமெடுத்து காட்சி தருகிறார்.*

*"கயாசுரன்" என்ற அசுரன் ப்ரம்மதேவர் கேட்டதற்கு இணங்கி தன் உடலை வேள்விக்கு உதவுவதற்கு கீழே கிடத்தினான். அவன் உடலின் தலை "சிரோ கயா" என்று பீஹாரிலும் "நாபிகயா" என்று ஒடிசாவில் உடலின் மத்திய பாகமும், ''பாதகயா'' என்று கால்கள் ஆந்திராவின் பிதாபுரத்திலும் நீளமாக நீண்டு கிடந்தன. ப்ரம்மா அவன் வயிற்றை யாக குண்டம் ஆக்கி யாகம் செய்தபோது அவன் உடல் ஏழு நாட்கள் அசையாவிட்டால் அசுரன் விஷ்ணுவிற்கு நிகரான பதவியை அடைவான் என்ற காரணத்தினால் 7வது நாள் அதிகாலை கால் மாட்டில் அமர்ந்திருந்த சிவன் சேவலாக உருமாறி கூவியதால் அசுரன் உடல் அசையவும் தலைமாட்டிலிருந்த விஷ்ணு அவன் தலையை தன் கால்களால் அழுத்தி அவனை வதைத்தார். இறக்கும் முன் அசுரன் மும்மூர்த்திகளிடம் ஒரு வரம் கேட்டான். "கயாவில் வந்து பிண்டம் போட்டு ஸ்ராத்தம் செய்பவர்களின் பித்ருக்கள் அனைவருக்கும் பிரம்ம லோகம் சித்திக்க வேண்டும்; மற்றும் அவர்களை எந்தவிதமான பாவங்களும் தீண்டக்கூடாது" என்று கயாசுரன் தன் நிலையிலிருந்து உயர்ந்து உலக மக்களுக்காக வரம் கேட்டு, சிறப்பினை அடைந்தான்.*

*பீஹாரில் சிரோகயாவில் விஷ்ணு கோவில், ஒடிசாவில் நாபிகயாவில் பிரம்மா கோவில் & ஆந்திராவில் பிதாபுரத்தில் பாதகயாவில் சிவன் கோவில் இந்த மூன்றையும் வாழ்வில் ஒரு முறையாவது தரிசித்து மும்மூர்த்திகளின் அருளைப் பெறுவோம். நாங்கள் இந்த மூன்று கயாவையும் சென்று தரிசித்துள்ளோம்.*

நமக்கு விஷ்ணு பதம் கிடைக்க விஷ்ணு பாதம் பற்றி வணங்கினால் நல்ல நிலையினை அடைய முடியும்.

17.04.2015 வெள்ளிக்கிழமையன்று காலை எழுந்து ரூமில் குளித்து சந்த்யாவந்தனம் முதலியவைகளை முடித்துவிட்டு லலிதாகாட் சென்று அங்கும் குளித்துவிட்டு காசி ஸ்ரீ விஸ்வநாதர், ஸ்ரீவிசாலாட்சி, ஸ்ரீ அன்னபூரணி மற்றும் இதர சந்நிதிகளான சத்ய நாராயணர். பார்வதி தேவி, ஸ்ரீ ஆஞ்சநேயர், சூரியன், சனைஸ்வரர் மற்றும் புவனேஷ்வரர் லிங்கம் தரிசித்துவிட்டு பிறகு பிரதக்ஷணம் செய்து 10 நமஸ்காரம் செய்தோம். ஸ்ரீ விஸ்வநாதர் & ஸ்ரீவிசாலாட்சி சந்நிதியில் கட்டாயம் 10 நமஸ்காரம் செய்ய வேண்டுமாம். அன்று கோவிலில் கூட்டம் அதிகம் இல்லாததால் மீண்டும் ஒருமுறை தரிசித்தோம். பிறகு அட்சய வடம், அனுமார், திரௌபதி ஆகியோரையும் தரிசித்தோம். இந்த அட்சய வடம் என்கிற பெரிய ஆலமரமானது கயாவில் நுனிப்பகுதியாகவும், காசியில் மத்யபகுதியாகவும், ப்ரயாகையில் அடிப்பகுதியாகவும் இருக்கிறது. இந்த மூன்றும் ஆன்மீக ரீதியில் இணைக்கப்பட்டுள்ளன என்று சாஸ்த்ரங்கள் கூறுகிறது. பிறகு ரிக்ஷாவில் ஏறி ரூமிற்கு வந்து சாப்பிட்டுவிட்டு பின்னர் சிறிது நேரம் ஓய்வு எடுத்தோம்.

மாலை சுமார் 3.30 மணிக்கு ஆட்டோ ஏறி காலபைரவர், தண்டபாணி, மிருத்யுஞ்சேஸ்வரர் தரிசித்தோம். இந்த கோவிலில் நாங்கள் உள்ளே நுழையும் போது சிவன் சந்நிதியில் இருந்து ஒரு பூமாலை எடுத்து குருக்கள் வீசி எரிந்தார் அது மிகச்சரியாக என் கழுத்தில் வந்து விழுந்தவுடன் எனக்கு மெய்சிலிர்த்தது. பிறகு சாரநாத் சென்று சுயம்பு சாரநாத்லிங்கமும் (சாரநாதேஸ்வரர்) மற்றும் ஸ்ரீஆதிசங்கரரால் பிரதிஷ்டை செய்யப்பட்ட சோமநாதேஸ்வரலிங்கமும் இரட்டை லிங்கமாக காட்சியளித்ததை சுமார் 25/30 படிகள் ஏறி தரிசித்தோம். பிறகு 1931-ல் கட்டப்பட்ட புத்தர் Temple (Gold Painted) ஸ்தூபி. பிறகு இலங்கையிலிருந்து கொண்டுவரப்பட்ட பெரிய போதிமரம் மற்றும் பெரிய மணி பார்த்தோம். இது 1932-

*ல் நடப்பட்டதாகும். புத்தர் தனது 5 சிஷ்யர் புடைசூழ உள்ள சிலையும் உள்ளது. இங்கு பிரார்த்தனை ரோலர்கள் நிறைய உள்ளன. அதை கைகளால் சுற்றி நாம் பிரார்த்தனை செய்து கொண்டால் அது நிறைவேறும் என்பது ஐதிகம். பிறகு திரும்பி வந்து சிந்தாமணி பிள்ளையார் கோவிலில் வெள்ளிக்கிழமை என்பதால் சிதறு தேங்காய் உடைத்தோம். பிறகு ரூமிற்கு வந்து ஓய்வு எடுத்துவிட்டு இரவு டிபன் சாப்பிட்டுப் படுத்தோம்.*

*18.04.2015 சனிக்கிழமை அமாவாசை பஞ்ச கட்ட தீர்த்த ஸ்ராத்தம். காலை 6.30 மணிக்கு கிளம்பி பஞ்ச தீர்த்த ஸ்நானம் பிண்ட பிரதான ஸ்ராத்தம் செய்தோம். முதலில் சிவாலா காட்டில் குளித்து போட்டில் ஏறி இரண்டு இடங்களில் பிண்ட ஸ்ராத்தம் செய்வதற்காக இரண்டு செட் அன்னம் (அரிசிச்சாதம்) சமைத்த பின் போட் கிளம்பியது. நாங்கள் ஆண்கள் தர்ப்பணம் செய்வதற்குள் அவரவர்கள் வீட்டுப் பெண்கள் மற்றும் மூன்று செட் அன்னம் சமைத்தார்கள். போட்டிலேயே சமைப்பதற்கு கரி அடுப்பு, வெங்கலப்பானை, கரண்டி, அரிசி, தாம்பாளம் தரப்பட்டது. நாங்கள் அனைவரும் ஒவ்வொரு முக்யமான படித்துறைகளிலும் ஸ்நானம், தர்ப்பணம், 17 பிண்டதானம் இவை செய்தோம். தர்ப்பணங்கள் முடிந்தவுடன் சுமார் 100 படிகள் ஏறி பிந்து மாதவரை தரிசித்துவிட்டு கங்கையிலே மாத்யாண்யம் செய்துவிட்டு சித்திரைமாத அமாவாசை தர்ப்பணம் செய்தோம். புத் என்ற நரகத்திலிருந்து பித்ருக்களை விடுவிப்பதால் மகனுக்கு புத்ரன் என்று பெயர். காசி மற்றும் கயாவில் ஸ்ராத்தங்களைச் செய்து எங்களின் பித்ருக்களுக்கு நற்கதி கிடைக்கச் செய்ததால் நானும் புத்ரன் என்ற கடமையை செய்து முடித்துவிட்டேன்.* *தொடரும்......*


**ஜாதக பரிவர்த்தனைக்கு**

*புதுவையில் பதிவு செய்ய விரும்புவோர் அணுகவும் :*

**ஸ்ரீ நடராஜன் - 9443103404**

# சாதனைப் பறவைகள்

*(சாதாரணப் பெண்களின் அசாதாரண வெற்றிக் கதைகள்)*

**டாக்டர்.ஷ்யாமா ஸ்வாமிநாதன்**


ராணி லக்ஷ்மிபாய்,


வேலு நாச்சியார்,


ஒனாகே


ஒபாவா

"பாரத தேசம் வீரப் பெண்களின் விளைநிலம்'' என்றே குறிப்பிடும் அளவிற்கு தங்களுக்கு நேர்ந்த எத்தனையோ இன்னல்களுக் கிடையேயும், வன்கொடுமைகளுக்கிடையேயும் துணிந்து செயல்பட்ட வீர மங்கையர்களின் பட்டியல் மிக அதிகம். இத்தகைய வீரப் பெண்களில் சிலர் இந்த தேசத்திற்காகவும், சிலர் தங்களது தனிப்பட்ட வாழ்க்கைக்காகவும் போராடி வெற்றி கண்டவர்கள். நாம் இரு வகையினரையும் பற்றித் தெரிந்து கெள்வோம்.

இந்த தேசத்தில் மன்னர்கள் ஆட்சிகாலத்தில், முகலாய, போர்சுகீசிய மற்றும் ஆங்கிலேய அந்நிய சக்திகளை துணிந்து எதிர்கொண்ட வீராங்கனைகள், பலர் இருக்கிறார்கள். இவர்களையெல்லாம் இந்த தேசம் இன்றும் தெய்வமாகவே கொண்டாடிக்கொண்டு இருக்கிறது. உதாரணமாக தமிழகத்தின் வீரமங்கை என்று போற்றப்படும் சிவகங்கையின் ராணி வேலுநாச்சியார் - கிழக்கிந்திய கம்பெனியை எதிர்த்துப் போரிட்டு வெற்றிகண்டவர். ஜான்சிராணி லக்ஷ்மிபாயின் வீரமும் தியாகமும் இன்றளவும் போற்றப்பட்டு வருகிறது. ஒனாகே ஒபாவா (உலக்கையால் எதிரிகளை ஓட ஓட விரட்டியவர்) ஹைதர் அலியின் படையை தனி மனுஷியாகப் போரிட்டு பலரைக் கொன்று சித்ரதுர்கா கோட்டையைக் காப்பாற்றியவர். சித்தோர் ராணி பத்மாவதி. அலாவுதீன் கில்ஜியை சாமர்த்தியமாகச் சந்தித்து, தன் கணவரை மீட்டுவந்து, பின்னர் தோல்வியை சந்திக்க நேரிட்டபோது, அந்தக்

கொடுரனின் பிடியிலிருந்து தப்பிக்க இதர ராஜபுத்தின பெண்களுடன் அக்னியில் ஐக்கியமானவர். இதுபோல் ராணி ருத்ரமாதேவி, ராணி துர்காவதி என்று இந்த தேசத்தின் வீர மங்கைகளின் பட்டியலும் நீண்டது.

சுதந்திரப் போராட்ட காலகட்டங்களிலும், நவீன இந்தியாவின் உருவக்கங்களிலும் இன்றைய அதி நாகரீக காலகட்டத்திலும் விவசாயத்திலிருந்து விமானம் ஓட்டுவது வரையிலும், அதிக அளவில் பெண்களின் பங்கு உச்சத்தை அடைந்து வருகிறது என்றே சொல்ல வேண்டும். பலரும் விவாதிப்பது போல் இத்தத்துவத்தில் பெண்கள் ஒடுக்கப் பட்டவர்களாகவும், உரிமைகள் பறிக்கப்பட்டிருப்பவர்களாகவும் இருந்திருந்தால் இத்தனை பெண்கள் எவ்வாறு சரித்திரம் படைத்திருக்க முடியும்? ஊடகங்கள் வேண்டுமென்றே ஹிந்து சம்பிரதாயங்களும், சடங்குகளும், விதிகளும் பெண்களுக்கு எதிரானவை என்று பொய்ச் செய்தி பரப்பி வருகின்றனர். இவை பற்றியெல்லாம் நாம் கவலைப்படவோ, விதண்டாவாதங்கள் செய்யவோ தேவையில்லை. இந்த தேசம் பெண்களைத் தாயாகவும் தெய்வமாகவும் போற்றி வழிபடும் பாரம்பர்யமிக்கது என்பதுதான் உண்மை. இயற்கையின் அத்தனை வளங்களையுமே நாம் அன்னையாகவேதான் பார்க்கிறோம். பாரததேசம் இம்மாதரசிகளின் பங்களிப்பின்றி முழுமையாகாது.

இந்த நிலை எவ்வாறு, எப்படி, இன்றைய அளவிற்கு கீழிறங்கியது? சிறுமியிலிருந்து மூதாட்டிவரையில் பெண்களைப் பார்த்தால் பெண் தெய்வங்களாக மட்டுமே கருதி கையெடுத்து கும்பிட்டுவந்த காலங்களும் மனித மனங்களும் எவ்வாறு மாறிப்போயின?

தென்னகத்தில், பாரம்பர்யப் பயிர் வளர்ப்புகளைத் தவிர்த்து, **CASHCROP** எனப்படும் பணப்பயிர்கள் பயிரிட ஆரம்பித்த பிறகுதான் **“வரதட்சிணை’** என்கிற ஒரு சமூக அவலம் சாதாரணர்களிடையே கூடப் பரவியது என்றும் அதன் அதிக பட்ச தீவிரத்தில்தான் பெண் குழந்தைகள் வெறுக்கப்பட்டனர் என்றும், அந்த வெறுப்பின் காரணமாகவே தமிழகத்தில் **பெண்**

**சிசுக் கொலைகள்** என்ற பெரும் சமூக அவலம் பரவ ஆரம்பித்தது என்றும் மறைந்த, புகழ் பெற்ற எழுத்தாளர் திருமதி.ராஜம் கிருஷ்ணன் தனது **"மண்ணகத்துப் பூந்துளிகள்"** என்கிற நூலில் எழுதியுள்ளார். மேலும் வடஇந்தியாவில் பெண் குழந்தைகளின் வெறுப்பிற்கான பல்வேறு காரணங்களில் மிக முக்கியமானது முகலாய மன்னர்கள் மற்றும் அதிகாரிகளின், பெண்களுக்கு எதிரான அட்டுழியங்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய இந்தியாவில், பன்னாட்டுச் சந்தைகளின் திறப்பால், பன்னாட்டுப் பொருட்களின் மோகத்தால், பெண்கள் வியாபாரப் பொருட்கள் போல் ஆக்கப்பட்டுவிட்டார்கள். இன்று எந்த ஒரு பொருளும், அது ஆண்கள் மட்டுமே பயன்படுத்தப்படும் பொருளாகவே இருந்தாலும் கூட, அதிலும் பெண்களின் அரை நிர்வாணப் படங்கள் இன்றி சந்தைப்படுத்தப்படவில்லை என்பது மிகவும் வருத்தமான விஷயம். இன்றைய திரைப்படங்களில் பெண்களின் சித்தரிப்பு பற்றி சொல்லவே தேவையில்லை. இத்தகைய கீழ்த்தரமான கண்ணோட்டங்களால், ஆறுமாத பெண் குழந்தையிலிருந்து என்பது வயது மூதாட்டி வரை, பெண்களாகிய நம்மைச் சுற்றி பயமுறுத்தும் சமூகம் இருக்கிறது என்பதற்காக பாரதப் பெண்கள் ஒடுங்கிவிடவில்லை. அத்தனையும் சமாளித்து, தங்கள் வெற்றிகளை அது சிறியதோ பெரியதோ அடைந்துவருகிறார்கள்.

எத்தகைய சூழலிலும் தங்களது குடும்பத்தின் பாரம்பர்யங்களையும் பின்பற்றிக்கொண்டு, குடும்பக் கடமைகளிலிருந்து விலகாமல், சமூகக் கட்டுபாடுகளையும் சமாளித்துக்கொண்டு, தங்களது லட்சியத்தையும் கைவிடாமல், தங்களை இந்த சமூகத்தின் பார்வையில் நிலைநிறுத்திக் கொள்வதற்கும் போராடி வெற்றிக்கொடி நாட்டியுள்ள ஏராளமான பெண்கள் இருக்கிறார்கள். எல்லோரையும் இந்த தொடரில் சொல்லி விட முடியும் என்று எனக்குத் தோன்றவில்லை. முடிந்தவரை சில சாதாரண குடும்பத்து சாதனைப் பறவைகளை தமிழ் புத்தாண்டிலிருந்து சந்திப்போம்.

தொடரும்...

# பசு - சர்வரோக நிவாரணி

*- ஆதிரையன்*

*நாட்டு மாடுகள் பெருமளவில் இன்றைக்கு காண அரிதாவதற்கு காரணம் அந்த இனங்களை ஆங்கிலேயர்கள் திட்டமிட்டு அழித்ததே! நாட்டு மாடுகளை அவர்கள் இனம்கண்டு அழிக்கும் காரணம் என்ன என்பதைப் பற்றி அறிவதற்கு முன்னர் நாட்டு மாடுகளின் ஒவ்வொரு சிறப்பினையும் காண்போம்.*

## பண்பாடு :

*இன்றைய தலைமுறையினரிடம் பண்பாடும் சாத்விக் குணமும் குறைந்து வருகிறது. பொதுவாக ஒரு மனிதனின் குணநலன்களுக்கு அவன் எடுத்துக் கொள்ளும் உணவும் ஒரு காரணமாகிறது.*

*சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்புவரை கூட நமக்கு நாட்டுமாடுகள் அதிகம் இருந்ததால் அதன் பால் உணவாக பெருமளவில் கிடைத்தது. பொதுவாக மூன்று குணங்கள் என்பது ஒவ்வொரு உயிர்களிடத்தும் உள்ளது. அந்த காலகட்டத்தில் ஒவ்வொரு கிராமத்திலும் இருக்கும் நீர்நிலைகளையொட்டி நீர்பிடிப்பு பகுதிகள் இருந்தன. இவற்றை ஆற்றுப் புறம்போக்கு ஏரிப் புறம்போக்கு, குளத்துப்புறம்போக்கு என அழைப்பர்.*

*நீர் நிலைகளில் ஒட்டியுள்ள இந்தப் பகுதிகளையும், இதனோடு இன்னும் சில நிலப்பரப்பு பகுதிகளையும் "மேச்சல் நிலம்" என்றழைக்கப்பட்டது. அதாவது ஆடு, மாடு போன்ற வளர்ப்பு விலங்கினங்களின் உணவிற்கானப் பகுதியாகும்.*

*இந்தப் பகுதிகளில் நாட்டு மாடுகளும் தன்னிச்சையாக மேய்ந்து தனது உணவை பூர்த்தி செய்து கொள்ளும்.*

*தானாக மேயும் போது, ஒரு புல்லின் மேல் பகுதியை மட்டுமே நாட்டு மாடுகள் எடுத்துக்கொள்கின்றன. காரணம், சாத்வீக குணம், ராஜஸ குணம், தாமஸ குணம் என்ற மூன்று குணங்களில் புல்லின் சாத்வீக குணம் நிறைந்தது மேல்பகுதி மட்டுமே! மீண்டும் சில நாட்கள் கழித்து மேல்பகுதி வளரும்போது, அதை உண்கிறது. இது, நாட்டு மாடுகளின்*

சிறப்பு. இதுவே கலப்பின மாடாக இருந்தால் அவை புல்லின் மொத்தப் பகுதியையும் உட்கொள்ளும்.

மேலும், நாட்டுமாடுகள், அதன் உடல்நிலையை உணர்ந்து அதற்கேற்ற உணவினை தேடி உண்ணும். உதாரணத்திற்கு... தனது வயிற்றில் பூச்சி இருப்பதை உணர்ந்தால் உடனே வேப்பிலையை தேடி உணவாக எடுத்துக் கொள்ளும். இவ்வாறு தானாக மேய்ச்சல் சென்று உட்கொள்ளும் மாடுகளின் பாலினையும், அது சார்ந்த வெண்ணெய், தயிர், மோர், நெய் போன்ற பொருட்களையும் எடுத்துக் கொண்டதால், அதற்கான சாத்வீக குணம் நிறைந்த மனிதர்கள் நமது சமுதாயத்தில் இருந்தார்கள். அவர்களது செயல்பாடுகளும் அவ்வாறே இருந்தன.

மேலும், இந்த மாடுகளின் கழிவுகளான சாணம், கோமூத்திரம் போன்ற பொருட்களே பிரதான உரமாக விளை நிலங்களுக்கு பயன்படுத்தப்பட்டன. இந்தப் பொருட்களை பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்ட உணவு தானியங்கள் இயற்கையாகவே அதிக சத்துக்கள் நிறைந்து காணப்பட்டன. மற்றும், நோய் எதிர்ப்பு சக்தி நிறைந்ததாகவும் இருந்தது.

நாட்டு மாட்டின் நேரிடைப் பொருட்களான பால் மற்றும் அது சார்ந்த பொருட்கள் மற்றும் இவற்றின் கழிவுகளால் உற்பத்தி செய்யப்பட்ட தானியங்கள் ஆகியவற்றை உணவாக எடுத்துக் கொண்ட நமது முன்னோர்கள் நோயில்லா பெரும் வாழ்வு வாழ்ந்தனர்.

வியாதியஸ்தன் ஒருவனை காண்பது அபூர்வமாக இருந்த இந்த சமுதாயத்தில் ஆரோக்கியமானவனை காண்பது தற்போது அபூர்வமாக உள்ளது. அதேபோன்று பண்பாடும், நிதானமும், சுயநலமில்லா மனிதர்கள் நிறைந்து வாழ்ந்த இந்த சமுதாயத்தில் தற்போது இவற்றிற்கு சொந்தக்காரரை தேடவேண்டியுள்ளது.

மொத்தத்தில் பண்பாடு இன்று சீரழிந்ததற்கு மனிதன் எடுத்துக் கொள்ளும் உணவும் ஒரு காரணமாகிறது. நாட்டு மாடுகள் பெருமளவில் இல்லாதது, அதன் பொருட்கள் உணவாக எடுத்துக் கொள்ளாததும் ஒரு காரணமாகும்.

தொடரும்...

# இராமாயணமும், மஹாபாரதமும்

(செஞ்சால்லரசு. மீ.சீனிவாசன், எம்.ஏ.எம்.ஏட்., பரமக்குடி)

*நாம் போற்றி வணங்கும் இதிகாசங்கள் இராமாயணமும், மஹாபாரதமும், இதிகாசம் என்பதற்கு "இது இவ்வாறு நடந்தது" என்பது பொருள். இவைகளில் முறையே ஸ்ரீராமரும், ஸ்ரீகிருஷ்ணரும் அவதாரங்களாகக் கருதப் பெற்று நாம் தெய்வங்களாக வணங்கி வருகிறோம். இருநூல்களும் வெறும் கற்பனையால் உதித்தமையன்று, தென்கிழக்காசிய நாடுகள் அனைத்திலும் பரவி நின்ற வரலாறுகள். இவ்விரு நூல்களையும் இங்கு ஒப்பிட்டு சிந்திப்போம்.*

| இராமாயணம் | | மஹாபாரதம் | |
|---|---|---|---|
| 1 | சிறையிருந்தாள் ஏற்றம் கூறுவது இது | 1 | இதுவோ தூதுபோனான் ஏற்றம் கூறுவது |
| 2 | திரேதாயுகத்தில் நடந்தது | 2 | துவாபரயுகத்தில் நடந்தது |
| 3 | அவதார புருஷனாகிய ஸ்ரீஇராமன்தன் தெய்வப் பண்பை வெளிக்காட்டாமல் உயரிய மனிதனாகவே வாழ்ந்து காட்டினான் | 3 | கண்ணனோ, தர்மம், அதர்மம் ஆகியவற்றைக் கையாண்டு தன் தெய்வத் தன்மையை வெளிப்படையாகவே காட்டினான். |
| 4 | ஸ்ரீராமன் விஸ்வரூபம் எடுக்கவில்லை. அனுமன்தான் விஸ்வரூபம் எடுத்தான். | 4 | கண்ணன் மகாபாரதத்தில் நான்கு இடங்களில் விஸ்வரூபம் எடுத்து நின்றான் |
| 5 | இராமன் வளர்பிறை நவமியில் அவதாரம் | 5 | கண்ணன் தேய்பிறை அஷ்டமியில் அவதாரம் |
| 6 | கோசலை வயிற்றில் ஸ்ரீராமன் உதித்தாலும் கைகேயி இடமே வளர்ந்தான். அவளையே அம்மா என அழைத்தான். எனவே ஸ்ரீராமனும் ஒருத்தி | 6 | தேவகியின் வயிற்றில் பிறந்து யசோதையின் மகனாய் ஆயர்பாடியில் வளர்ந்தவன். எனவே இவனும் ஒருத்தி மகனாய் பிறந்து ஒருத்தி மகனாய் |

| | | | |
|---|---|---|---|
| | மகனாய்ப் பிறந்து ஒருத்தி மகனாய் வளர்ந்தான். | | வளர்ந்தவனே. |
| 7 | இராமன் பிறந்ததும் வளர்ந்ததும் அரண்மனையில். | 7 | கண்ணன் சிறைச்சாலையில் பிறந்து, கோகுலத்தில் வளர்ந்தவன். |
| 8 | ஸ்ரீராமன் கல்லைப் பெண்ணாக்கினான். | 8 | கண்ணன் கூனல்முதுகு கொண்டவளைப் பேரழகியாக்கினான். |
| 9 | பிறன் மனைவியை விழைதல் என்னும் குற்றவியல் (CRIMINAL CASE ) வழக்குக் கதை இராமாயணம் | 9 | பங்காளிகளுக்கிடையே நடைபெற்ற உரிமையியல் வழக்கை (CIVIL CASE ) கருவாக உடையது மகாபாரதம். |
| 10 | ஸ்ரீராமனுக்கு வானரப்படை மட்டுமே போரிட உதவியது. | 10 | பாரதப் போரோ பங்காளிகள் இருவரும் அண்டை அரசர்களின் படைகளைத் தத்தமக்கு ஆதரவாகத் தேடி சண்டையிட நேரிட்டது. |
| 11 | போரில் ஸ்ரீராமர் தாமே வில்லும் கையுமாக நின்று போர் புரிந்தார் | 11 | கண்ணனோ தான் போரிடாது மற்றவர்களைப் போரிட வைத்துத் தருமத்தை நிலைநாட்டினான். |
| 12 | அரசனும், மக்களும், ரிஷிகளும், வானரங்களும், கரடியும், வேடனும் ஒன்றுபட்டு வாழ்ந்து ஒற்றுமையின் அவசியத்தை நேர்மறையாக உணர்த்துவது இராமாயணம். | 12 | உடன் பிறந்தோரே ஒருவருக்கொருவர் முரண்பட்டு, சண்டையிட்டு குலம் அழிவதற்கு காரணமானதைக் கூறி ஒற்றுமையின் தேவையை எதிர்மறையாகக் கூறுவது மகாபாரதம். |
| 13 | வேள்வி நிலத்தில் பிறந்தவள் சீதை. எனவே அகங்காரம் அடங்கியவளாய், பொறுமையின் உறைவிடமாய் இருந்தாள். | 13 | வேள்வித் தீயில் தோன்றிய திரௌபதி என்பதால் கோபமும், சபதம் செய்யும் பண்பினளாய் இருந்தாள். |
| 14 | தந்தை தசரதன் சொற்படி | 14 | தேவகியின் வயிற்றில் பிறந்த கண்ணன் தந்தை |

| | | | |
|---|---|---|---|
| | கானகம் சென்றவன் ஸ்ரீராமன் | | வசுதேவராலேயே கோகுலத்திற்கு கொண்டு செல்லப்பட்டான். |
| 15 | இந்திரன் அம்சமாகிய வாலியைக் கொன்று சூரியன் குமாரனாகிய சுக்ரீவனுக்கு அரசுரிமையைத் தந்தவர் ஸ்ரீராமர். | 15 | சூரியன் மகனாகிய கர்ணன் அழிவதற்குக் காரணமாகியதுடன் இந்திரன் மகனாகிய அர்ச்சுனனுக்குத் தேரோட்டியாகச் செயல்பட்டு அவன் வெற்றிக்குத் துணையாக இருந்தான். |
| 16 | திருவாடானைத் தலத்தில் சிவபிரானாகிய ஆதிரெத்னேஸ்வரரிடம் ஸ்ரீராமர் பெற்ற உபதேசமே சிவகீதையாகும். | 16 | போர்க்களத்தில் கண்ணன் அர்ச்சுனனுக்கு உபதேசித்ததே ஸ்ரீமத்பகவத் கீதையாகும். |
| 17 | இராமன் கானகம் புறப்படுகையில் தாய் கோசலை கூறிய அறிவுரை, "தர்மத்தைக் காக்க" என்பதாகும். மேலும் தருமமே இராமனைக் காக்க வேண்டும் என ஆசியும் கூறினாள். | 17 | பீமன், ஜராசந்தன், பகாசுரன், இடும்பன், கீசகன், துரியோதனன். ஆகிய அறுவரும் சமபலம் உடையவர்களாயினும், பீமன் தருமத்தின் பக்கம் நின்றமையால் பீமன் மற்ற ஐவரையும் வெற்றி கொண்டான். |
| 18 | இராமன் பிறக்கு முன்பே இராவணன் இராமனுக்குப் பகையில்லை. | 18 | கண்ணன் பிறக்கும் முன்பே கம்சன் பகைவன் ஆயினன். |

இரு நூல்கள் மூலம் நாம் தெரிந்து கொள்ள வேண்டிய உண்மை, இவ்வுலகில் தருமமும், அதர்மமும் கலந்தே வரும். அவ்வக்கால யுகதர்மங்களுக்கேற்ப வினைகளைச் செய்ய நேரிடுகிறது. எனினும் தருமம் இறுதியில் வென்றேதீரும் என்பதாகும், அம்மாபெரும் இயற்கைச் சக்தியின் நியதியை உணர்ந்து தெளிவு பெறுவோமாக.

ஹரே ராம ஹரே ராம ராம நாம ஹரே ஹரே!
ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே!

தொடரும்...

**Space Sponsored by : Dharmapuri Sath Sangam, Dharmapuri.**

# புரோஹிதர்
# "ஆவணம் - ஒரு ஆதாரம்"

புரோகிதர்கள் அவர்களது கிராமங்களில் நடக்கும் இறப்புகளை குறிப்பதும் அது பிற்காலத்தில் நீதிமன்ற வழக்கிற்கு ஆதாரமாக இருந்ததையும் காண்போம்.

தற்போது பிறப்பிற்கான ஆவணம் காண்போம்.

தற்போது அரசு பிறப்பு, இறப்பை பதிவு செய்வீர் என பேருந்து முதல் பட்டி தொட்டி எங்கும் விளம்பரம் செய்து மக்களிடையே ஓர் பெரிய விழிப்புணர்வை உருவாக்கி அதை கட்டாயமாக்கியுள்ளது.

இந்த பதிவுகளின் முக்கியத்துவத்தை மக்கள் அறியாத பல நூறு ஆண்டுகளுக்கு முன்னரே ஒவ்வொரு கிராம புரோகிதரும் பொறுப்பாக செய்துள்ளனர்.

அக்கால குழந்தை பிறப்பு என்பது கிராம மருத்துவச்சி அல்லது வீட்டிலுள்ள பெரியவர்களால் அவரவர் வீட்டிலேயே நடந்தது. இப்போது உள்ளதுபோன்ற மருத்துவ வசதியோ, போக்குவரத்து சாலை வசதியோ அப்போதைக்கு இல்லை.

இவ்வாறு நடைபெறும் குழந்தை பிறப்பு செய்தியை கிராமத்தினர் உடனடியாக ''பஞ்சாங்க அய்யர்'' என்று அழைக்கப்படும் புரோகிதரிடம் தெரியப்படுத்துகிறார்கள். அவர் அதை தெளிவாக பஞ்சாங்கத்தில் எழுதுகிறார். அதாவது, அந்த குறிப்பிட்ட தமிழ் மாதத்தில் பஞ்சாங்க பக்கத்தில் அன்றைய தமிழ் தேதியை சுழித்து அடையாளமாக செய்து அந்தப் பக்கத்தின் பக்கவாட்டில் உள்ள வெற்றுப் பகுதியில் தெரு, பெயர், வீட்டு பெயர், தம்பதி பெயர் ஆகியவற்றை எழுதி பெண் குழந்தையாக இருந்தால் "ஸ்திரி ப்ரஜை" சுபஜெனனம் என்று ஆண் குழந்தையாக இருந்தால் "புருஷ ப்ரஜை" சுபஜெனனம் என்று பதிவு செய்து வைக்கிறார்.

இப்படி அவரது பஞ்சாங்கத்தின் ஒவ்வொரு தமிழ்மாத பக்கத்திலும் ஒன்றிற்கும் மேற்பட்ட பதிவுகளை பழைய அவர்களது பஞ்சாங்கத்தில் இருப்பதை இன்றைக்கும் காணலாம்.

இந்த பஞ்சாங்க குறிப்புகள் எவ்வாறு ஆதாரப்பூர்வ ஆவணமாக அரசு எடுத்துக் கொண்டது என்பதையும் காண்போம்.

*கிட்டத்தட்ட 35 ஆண்டுகளுக்கு முன்னர் பிறந்த பலருக்கு பிறப்பு சான்று இல்லை. தற்போது இவர்களுக்கு தேவை எனில், இவர்கள் வட்டாட்சியர் அலுவலகத்தில் விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பம் பெற்று வட்டாட்சியர் அவரிடம் உள்ள சம்பந்தப்பட்ட கிராம ஆவணப் பதிவேட்டில் விண்ணப்பதாரரின் பெயர் / பிறப்பு பதிவு செய்திருந்தால் அதை சான்றாக கொடுத்துவிடுவார். அப்படி இல்லை எனில் பதிவேட்டில் பதிவு செய்யப்படவில்லை என்று சான்று கொடுத்துவிடுவார்.*

*பதிவு செய்யப்படவில்லை என்ற சான்றிதழை பெற்று நீதிமன்றத்தை அணுகி, சம்பந்தப்பட்டவர் பிறப்பு சான்று கேட்டு கோரிக்கை வைக்க வேண்டும்.*

*நீதிபதி,*

*இந்தக் கோரிக்கை மனுவை அந்த மனுதாரர் குறிப்பிட்ட தேதியில் / குறிப்பிட்ட கிராமத்தில் பிறந்தார் என்பதை விசாரித்து அறிக்கை தாக்கல் செய்ய விசாரணை அதிகாரிக்கு உத்திரவிடுவார்.*

*இந்த உத்தரவைத் தொடர்ந்து விசாரணை அதிகாரி தனது விசாரணையை அந்த கிராமத்தில் தொடங்குவார். விசாரணை அதிகாரி இளம் வயது மற்றும் அந்த குறிப்பிட்ட கிராமத்திற்கு தொடர்பில்லாதவராக இருப்பார், மற்றும் விண்ணப்பதாரரின் வயதை ஒத்தவர்களும் கிராமங்களில் கிடைக்க அரிதானதாக இருக்கும். யாரோ ஒரிரு பெரியவர்கள் இருப்பார்கள், எனில், அவர்கள், இந்தக் குறிப்பிட்ட தேதியில்தான் விண்ணப்பதாரர் பிறந்தார் என்ற நினைவு சார்ந்த தெளிவும் இருக்காது.*

*இந்த சூழலில் பஞ்சாங்கத்தின் ஒரே பக்கத்தில் அந்தக் குறிப்பிட்ட தமிழ் மாதத்தில் புரோகிதரால் எழுதி வைக்கப்பட்டிருக்கும் பிறப்பு குறிப்பு உறுதியான ஆதாரமாக எடுத்துக் கொண்டு அதன் நகலோடு விசாரணை அதிகாரி அறிக்கை தாக்கல் செய்கிறார்.*

*இந்த அறிக்கையை ஏற்றுக் கொண்ட நீதிமன்றம் புதியதாக பதிந்து பிறப்புச் சான்று வழங்க வருவாய்துறைக்கு உத்திரவிடுகிறது. மேலும், புரோகிதரின் சுயநலமில்லா சேவையையும் பாராட்டுகிறது.*

**- ஆதிரையன்**

## வாசகர் கடிதம்

பிப்ரவரி 2021 இதழ் வேதபாரதி படித்தேன் "சுபாஷிதம்" நல்லுரைகள் பலருக்கும் பயன்படக்கூடிய அற்புதமான தகவல்கள் உள்ளது.

"புரோஹிதர்", "பசு சர்வரோக நிவாரணி", "சாதனைப் பறவைகள்" போன்றவிஷயங்களும் மிக அருமை.

**ஆர்.சூர்யநாராயணன்,** திருவான்மியூர், சென்னை

---

பின்னல் என்பது தலைமுடியின் மூன்று கால்கள் பின்னி இணைவது; ஆனால் நம் புறக் கண்களுக்கு இரண்டு கால்தான் தெரியும்; மூன்றாவது கால் ப்ரயாகையில் சரஸ்வதி நதி போல் அந்தர்யாமியாக இணையும் – அது போல் வேத பாரதியின் பயிற்சியும் பெண்மையைப் போற்றுவோம் நிகழ்ச்சி மூலம் ஆழ்மனதில் நன்கு பதிந்துள்ளது. **திருச்சி K.கணேசன்.**

---

அனைவருக்கும் நமஸ்காரங்கள் கடந்த சில மாதங்களாக வேதபாரதி அமைப்பின் மூலம் நடத்தப்பட்டு வரும் அனைத்து ஸ்லோக வகுப்புகளும் பெரியவர்களுக்கும் சிறியவர்களுக்கும் மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்று வருவதற்கு முக்கிய காரணம் திருமதி. நீலாமாமியின் கற்றுத் தரும் பாங்கும் அதற்கு மிக தெளிவாகவும் மிகவும் புரிந்து கொள்ளும் வகையில் அமைந்துள்ள பாஷ்யம் வழங்கும் திரு.முரளிதரன் மாமாவின் பங்கும் முக்கியகாரணம் என்பதை யாரும் மறுக்க முடியாது. வகுப்புகள் முடிந்தவுடன் அனைத்தையும் ஒரே லிங்-ஆக அனுப்பினால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்பது எனது தாழ்மையான கருத்து. இதனை சிறந்த முறையில் ஏற்பாடு செய்து வரும் வேதபாரதி அமைப்பிற்கு நன்றி.

**மதுரம் கிருஷ்ணமூர்த்தி, ஊரப்பாக்கம்**

---

நமஸ்காரம் மாமா, இன்றைய வாசகர் நிகழ்ச்சி மிக அருமை. மாமா வாசகர்களுக்கும் வாய்ப்பு அளித்து இருக்கலாம். நான் கூறநினைத்தது சந்தா உயர்த்துவது, சமஸ்கிருதத்திற்கு பக்கம் ஒதுக்குவது, ராமகிருஷ்ணன் மாமா சொல்லும் மருத்துவ குறிப்புகள், வேத பாடத்திற்கு பக்கம் ஒதுக்குவது இதுவே நான் கூறநினைத்தது. வாழ்க வேதபாரதி. **ஐயப்பன், சென்னை.**

# இந்தியா 'பாபா' க்களில் மூழ்கிவிட்டதா?

சென்றமாத தொடர்ச்சி...



இத்தகைய 'பாபா'க்களிடம் கண்களை மூடிக்கொண்டு தங்களது செல்வத்தையும் சொத்துக்களையும் இழந்து விடுகின்றனர். இதன் காரணமாக பேராசை கொண்ட போலி சாமியார்கள், அளவற்ற செல்வங்களுக்கு அதிபதியாகி விடுகிறார்கள். இத்தகையவர்கள், பொதுமக்களைத் திருப்திப் படுத்துவதற்காக அவ்வப்போது சில சமூகப் பணிகளைச் செய்துவிட்டு, தாங்கள் சேர்த்து வைத்துள்ள அபாரமான சொத்துக்களைக் கொண்டு உல்லாசமான சுக போக வாழ்க்கை வாழுகிறார்கள். இத்தகைய துறவிகள் தங்களுடைய திறமைமிக்க காய் நகர்த்தல்களினால் அரசியல்வாதிகளையும் தங்கள் ஆளுமைக்குள் கொண்டுவந்து அரசியலிலும் ஆட்சியிலும் தங்கள் அதிகாரத்தை செலுத்தத் தொடங்கி விடுகிறார்கள்.

சமீப காலங்களாக, இத்தகைய 'பாபா'க்களின் வளர்ச்சி உச்சத்தை தொட்டுவிட்டது என்பதை, அவர்களுக்கு கூடும் கூட்டத்தின் அளவு கொண்டு அறியமுடிகிறது என்பது மட்டுமல்லாமல் இதுவே மிகப்பெரிய வர்த்தக சாம்ராஜ்யமாக உருப்பெற்று கோடிகளில் புழங்க ஆரம்பித்துவிட்டனர் என்பதும் தெளிவாகப் புரிகிறது. பேராசைகொண்ட, சுயநலமிக்க அரசியல்வாதிகளும், நாணயமற்ற ஊழியர்களும், வெட்கம்கெட்ட போலி பாபாக்களும் இந்த மகத்தான பாரத தேசத்தை, ஊழல் மிக்கதாகவும், வறுமை மிக்கதாகவும் ஆக்கிய பெருமைக்குரியவர்களாகிறார்கள்.

இருப்பினும் இந்த தேசம் பண்டைய மகத்தான மகான்களுக்கும், அவர்களின் ஆன்மீக வழிகாட்டுதல்களுக்கும் மிகவும் கடமைப்பட்டுள்ளது. இதன் காரணமாக எத்தகைய சூழலிலும் தனது பாரம்பர்யங்கள், கலாச்சாரங்கள்

ஆகியவற்றிலிருந்து விலகிவிடாது உயர்ந்து நிற்கும் என்பதில் எத்தகைய சந்தேகமுமில்லை. ஆன்மீக மற்றும் பல்வேறு மதம் சார்ந்த குருமார்களான ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் ஜி, ஜைன குருவான ராஷ்டிர சந்த் நாம்ரமுனி மகாராஜ் சாஹேப், பூஜ்ய ஸ்ரீ மஹந்த் ஸ்வாமிஜி, ஸ்ரீ முராரி பாபு, ஸ்ரீ காஞ்சி மகா பெரியவர்கள், போன்றபல ஆன்மீக குருமார்கள் இன்றும் தங்களது தூய சிந்தனைகளால் நவீன கால இளைஞர்கள் மற்றும் முதியோர்களை சரியான பாதையில் நடத்திச் செல்கிறார்கள். அதே சமயத்தில் ஆன்மீகம் என்றபோர்வையில் பல்வேறு சமூகக் குற்றங்களில் ஈடுபட்டு, வளமான சொத்துக்களை குவித்துக் கொண்டிருக்கும் எண்ணற்றபோலி குருமார்கள் கண்டறியப்பட்டு தண்டனைக்குள்ளாக்கப்படுவதும் நடந்து கொண்டுதான் இருக்கிறது.

**குஜராத்தி மூலம் : அமிதாப் தோஷி**

**தமிழாக்கம் : - டாக்டர் ஷ்யாமா ஸ்வாமிநாதன்.**

## ஆறாம் ஆண்டு மாஸிமக வேதபாராயணம்

*ப்ரஹ்மஸ்ரீ கைலாஸநாத கனபாடிகள் அவர்கள் ஏற்பாட்டில் 17.02.2021 முதல் 26.02.2021 வரை கும்பகோணம் விஜயவல்லி ஸுதர்ஸனவல்லி ஸமேத ஸ்ரீ சக்ரபாணி ஆலயத்திலும், ஸ்ரீமங்களாம்பிகை ஸமேத ஸ்ரீ ஆதி கும்பேஸ்வரர் ஆலயத்திலும் சிறப்பாக நடைபெற்றது.*

99940 89133



99940 89140

SRI SASTHA CATERING



We are Supplying Meals,
Tiffin & Marriage Sear
Variation in Order



14-C, Sitravasu Street, Macmillan Nagar, Nanganallur, Chennai.

# ANATHA PRETHA KAINKARYA TRUST
# அநாத ப்ரேத கைங்கர்ய ட்ரஸ்ட்

Communication Address : S. SREEDHAR, Poomalai Gopinath Blossoms, Villa 3A, Govindan Nagar Main Road, Palavakkam, Chennai - 600041.
Mobile : +91-9500005772, +91-9840243592, +91-9445378071
Email : dharmaa.apkt@gmail.com Website : www.dharmaa.org

## ஸ்ரீ காஞ்சி
## மஹா ஸ்வாமிகளின் அருளுரை
## தெய்வத்தின் குரல் 3ம் பாகம்
## அநாதைப் பிரேத ஸம்ஸ்காரம்
## இது தான் அச்வமேதம்



*இதுவரை அச்வமேதத்துக்கு ஸமமான பலனைத் தருகிற ஒரு பணியைச் சொல்லவில்லை. மற்ற எல்லாவற்றையும் விட உயர்ந்ததான அந்தப் பணி என்னவென்றால், அதுதான் அநாதைப் ப்ரேத ஸம்ஸ்காரம்*

**அநாத ப்ரேத ஸம்ஸ்காராத்**
**அச்வமேத பலம் லபேத்**

*என்பது சாஸ்த்ர வசனம்*

*பர - உபகாரமாக, செத்துப் போன இன்னொரு ஜீவனுக்கு இதனால் உதவி பண்ணும் போதே, நமக்குப் பாபம் வராமல், கடமையைச் செய்து, நமக்கு உபகாரம் பண்ணிக் கொள்கிறோம்.*

**இந்த அறக்கட்டளையின் நோக்கம்**

1. *அநாத ப்ரேத ஸம்ஸ்காரம்*
2. *கர்த்தா ஏழையாக இருந்தால் அவர் செய்கின்ற தகன காரியங்களுக்கு உதவி செய்தல்.*
3. *நீத்தார் கடன், அந்த்யேஷ்டி இவைகளை குறித்து தர்மப்ரசாரம் செய்தல், பொது மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்துதல்.*
4. *மருத்துவமனையில் பல மாதங்களாக கிடக்கும் ப்ரேதங்களை அரசு அல்லது நீதிமன்ற உத்தரவு பெற்று உரிய ஸம்ஸ்காரம் செய்தல்*

**Contributions can be sent to :**
**A/c Name : Anatha Pretha Kainkarya Trust**
**Bank Name : Canara Bank, T.Nagar Branch**
**SB A/c No : 0917101048526 / IFSC Code : CNRB0000917**

**Cheques should be sent to the communication Address listed on top of this page. The donors are requested to send an email to dharmaa.apkt@gmail.com with full details of transfer, Address, email and contact Number.**

# இமைப் பொழுதில்
# கண் முன்
# உங்கள் கிரெடிட் கார்டு

சிட்டி யூனியன் பேங்க் வழங்கும் உடனடி கிரெடிட் கார்டு




சிட்டி யூனியன் பேங்க் வழங்கும் உடனடி ஆன்லைன் டைட்டானியம் கிரெடிட் கார்டு. வங்கியில் வைப்புக் கணக்கு (Fixed Deposit) வைத்துள்ள அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் இந்த கிரெடிட் கார்டு முற்றிலும் இலவசமாக வழங்கப்படுகிறது.

சிட்டி யூனியன் பேங்கின் வாடிக்கையாளர்கள் இந்த கிரெடிட் கார்டினை பெற CUB நெட் பேங்கிங் மூலம் எளிமையான முறையில் உடனடியாக விண்ணப்பிக்கலாம். நீங்கள் விண்ணப்பித்தவுடன் உங்கள் கம்ப்யூட்டர் திரையில் Virtual Credit Card தோன்றும். இதனை உடனடியாக உபயோகப்படுத்தி ஆன்லைனில் ஷாப்பிங் மற்றும் டிக்கட் புக்கிங், பணம் செலுத்துதல் ஆகிய தேவைகளைப் பூர்த்தி செய்யலாம்.

உங்கள் பிளாஸ்டிக் கிரெடிட் கார்டு விரைவிலேயே உங்கள் இல்லத்தையோ / அலுவலகத்தையோ வந்தடையும்.

CUB
TRUST AND EXCELLENCE
SINCE 1904

**சிட்டி யூனியன் பேங்க்**

www.cityunionbank.com ராசியான பேங்க், ஈஸியான பேங்க்

For assistance, Call our 24x7 Customer Care at 044-7122 5000, Mobile : 7299075077 / 7299075078
Keep your bank account details, passwords, ATM PIN, OTP etc. safe. Do not share with anyone.

REGD No. : TN/CC(S)DN/571/21-23 RNI No. : TNTAM/2016/73726
TN/PM G (CCR) / WPP 605/21-23 / Valid from 01.01.2021 to 31.12.2023
Published 1-7th (1st Week) Every Month




தரமான நகைகளுக்கு
சரியான முகவரி....

சூர்யா ஜுவல்லர்ஸ்® A/c

287,288, புளியமரச்சந்து, ஈஸ்வரன் கோவில் வீதி, திருப்பூர் - 4. போன்: 0421 2241829

78, ஈஸ்வரன் கோயில் வீதி, குலாலர் பிள்ளையார் கோயில் எதிரில், திருப்பூர். போன் : 0421 2241827

சூர்யா எலக்ட்ரிக்கல்ஸ்

7(2), புளியமரத்தோட்டம், மங்கலம் ரோடு, திருப்பூர் 4.
போன்: 0421 2241826

To

Printed Matter

If not delivered please return to
VEDABHARATHI
No.31, Seshadripuram 1st Main Road, Baby Nagar, Velachery, Chennai-42.